විද්‍යා, තාක්ෂණ, පර්යේෂණ, නිපුණතා සංවර්ධන හා වෘත්තීය පුහුණු සහ
කන්ද උඩරට උරුමය පිළිබඳ අමාත්‍යාංශය
விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும்
வாழ்க்கை தொழிற்பயிற்சி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு
MINISTRY OF SCIENCE, TECHNOLOGY, RESEARCH, SKILLS DEVELOPMENT &
VOCATIONAL TRAINING AND KANDYAN HERITAGE

ජාතික ආධුනිකත්ව හා කාර්මික පුහුණු කිරීම් අධිකාරිය
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
National Apprentice & Industrial Training Authority

වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
ANNUAL REPORT 2018

971. ශ්‍රී ජයවර්ධනපුර මාවත, වැලිකඩ, රාජගිරිය.
971, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை,வெலிக்கடை, இராஜகிரிய.
971, Sri Jayawardanapura Mawatha, Welikada, Rajagiriya

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை

வருடாந்த அறிக்கை

2018

உள்ளடக்கம

தலைவரின் செய்தி	01
முகவுரை	02
வரலாறு	03
அறிமுகம்	04 - 05
தூர நோக்கும் பணிக்கூற்றும்	06
2018.....	07 - 08
1. நிறுவன தகவல்கள்	09 - 10
2. நிர்வாகக் குழு	11 - 12
3. பணிப்பாளர் சபை உத்தியோகத்தர்கள்	13
4. மாவட்ட முகாமையாளர்கள	14
5. நிர்வாகக் கட்டமைப்பு	15
6. அதிகார சபையின் நோக்கம்	16
7. அதிகார சபையின் பிரதான செயற்பாடுகள்	16
8. பயிற்சி முறை மற்றும் ஏனைய பிரதான வேலைத்திட்டங்கள்	17 - 21
9. தரவு விபரிப்பும் பகுப்பாய்வும்	22 - 55
10. ஏனைய செயற்பாடுகள்	56 - 75
11. இறுதி கணக்கறிக்கை	76 - 82
12. கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையும் பதில்களும்	83 - 97

தலைவரின் செய்தி...



தேசிய பயிலுநர் சபையாக 1971ஆம் ஆண்டு 49ஆம் இலக்க பயிலுநர் சட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு, மீண்டும் 1990ஆம் ஆண்டு 20ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தெழிற்கல்வியின் கீழ் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையாக பெயரிடப்பட்டு, இன்றுவரை தனது பொறுப்புகள் மற்றும் செயற்பாடுகளை நன்றாகப் புரிந்து கொண்டு எமது அதிகார சபை தொழிற் பயிற்சி துறையில் மேலும் பாரிய செயற்பாடுகளைச் செய்வதன் மூலமாக எமது நிறுவனத்தை உயரிய இடத்திற்கு பிரகாசிக்கச் செய்வோம் என இதய பூர்வமான மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன்.

எனது நிறுவனத்தின் பிரதான நோக்கம் மற்றும் விருப்பமாவது, நாட்டின் பொருளாதாரத்திற்கு அவசியமான திறன்களுடன் கூடிய இளைய சமுதாயத்தை உருவாக்குவதாகும்.

எனவே எமது வருடாந்த அறிக்கை மூலம் அதிகார சபையில் எனது நிர்வாக காலப்பகுதியில் Dreamron, Insee, Tokyo போன்ற நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுவதன் மூலம் பயிற்சி சந்தர்ப்பங்கள் பலவற்றை இளைய சமுதாயத்திற்கு உரிமையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் வெற்றிக்கான சரியான பாதையை இளைஞர்கள் உங்கள் கைகளில் வழங்குவதை முழு இலங்கைக்கும் அறிவிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 25000 தொழில் வாய்ப்புகள், உள்வாங்கலை இரட்டிப்பாக்குவதன் ஊடாக தொழிலற்ற இளம் சமுதாயத்திற்கு தொழில் வாய்ப்புகள் வழங்குவதன் மூலம் வலுவூட்டல் எனது முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும்.

அது மட்டுமல்லாது, ஒரு போதும் நிறுத்தப்படாத துறைகள் சில முழு இலங்கையிலும் சேவை வழங்குநர்கள் மூலம் விழிப்புணர்வு ஊட்டல் தொடர்பாக கலந்துரையாடுவதன் ஊடாக தொழிற் பயிற்சி பற்றி புதிய மாற்றத்தை ஏற்படுத்த எனக்கு முடிந்தது. அவ்வாறே முச்சக்கர வண்டி ஓட்டுநர்களின் குறுகிய மனப்பாங்கிலிருந்து மீட்கும் நோக்குடன் அவர்களை பல்வகை நிபுணர்கள் Multi Expert Skills Craftsman ஆக்குவதற்கு தொழிற்றுறை ஒன்றினை அறிமுகப்படுத்தல் போன்ற வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதன் மூலம் நிறுவனத்தை வளர்ச்சியினை நோக்கிக் கொண்டு செல்லல் போன்ற செயற்பாடுகளின் முன்னேற்றம் 2017 வருடாந்த அறிக்கை மூலம் விபரித்துக் காட்ட முடியும்.

மிகவும் போட்டியான சூழலில் பல்வேறு கஷ்டங்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்து எனது நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை வெற்றி கொள்ள முடிந்தது எனது ஊழியர் குழுவின் விரிவான அர்ப்பணிப்பு மூலமேயாகும். அந்த தரத்தினை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எனது நிர்வாகக் குழுவின் ஒத்துழைப்பு மற்றும் நிறுவன செயற்பாடுகள், பயிலுநர்களுக்கு பயிற்சி சந்தர்ப்பங்களை வழங்கிய அரச மற்றும் தனியார் பிரிவுகளுக்கு நன்றி தெரிவிப்பதற்கும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றேன்.

வைத்தியர் சாரங்க அழகப்பெரும
தலைவர்

முகவுரை

1971ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆவது வாசகத்திற்கு அமைய அதிகார சபையினால் வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியுள்ளது.

இவ் அறிக்கை 03 பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் பயிற்சி வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் பற்றிய விபரம், பயிற்சி தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் வருடத்திற்குரிய சுருக்கமான வருடாந்த கணக்கு அறிக்கை மற்றும் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தகவல்களையும் உள்ளடக்கி இவ் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

2018 வருடாந்த அறிக்கையைத் தயாரிப்பதற்காக நாடு பூராகவும் செயற்படுகின்ற 25 மாவட்டக் காரியாலயங்களின் முகாமையாளர்கள் மற்றும் தேசிய நிறுவனங்களின் நிறுவனத் தலைவர்கள் போன்று பிரதான அலுவலகத்தில் அந்தந்தப் பிரிவுத் தலைவர்கள் வழங்கிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

2018

வரலாறு

1. இற்றைக்கு 47 வருடங்களுக்கு முன்பு இலங்கையில் ஏற்பட்ட இளைஞர் அமைதியின்மைக்கு தீர்வாக அரசாங்கத்தின் தலையீட்டிற்கு அமைய 1971ஆம் ஆண்டு 49ஆம் இலக்க தேசிய பயிலுநர் சட்டத்தின் கீழ் தேசிய பயிலுநர் சபை ஆரம்பிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் மற்றும் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் பயிலுநர் பயிற்சி தொடர்பான பாடத்திட்ட அபிவிருத்தி, பயிற்சித் திட்டங்களுக்கான தரங்களை உருவாக்குதல், தொலைக்கல்விக்கான அறிவுறுத்தல்களைத் தயாரித்தல், தேசிய நிபுணத்துவ சான்றிதழ்கள் வழங்கல் போன்ற பல்வேறு வெற்றிகள் தேசிய பயிலுநர் சபையின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டது.

2. 1983ஆம் ஆண்டு முதலாவது தேசிய பயிலுநர் நிறுவனமாக பயிலுநர் பயிற்சி நிறுவனம் ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் உதவியுடன் இல. 581, காலி வீதி, கட்டுப்பெத்தை, மொரட்டுவை எனும் இடத்தில் நிறுவப்பட்டது. 1985 இல் இரண்டாவது தேசிய பயிற்சி நிறுவனத்தை ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் மற்றும் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்துடன் இணைந்து தொழில்நுட்பவியலாளர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனம் என்ற பெயரில் 18ஆம் கட்டை, விகாரை வீதி, கட்டுநாயக்க எனும் இடத்தில் அமைக்கப்பட்டது.

3. 1989ஆம் ஆண்டு மூன்றாவது தேசிய பயிலுநர் நிறுவனமாக ஜப்பான் அரசின் உதவியுடன் மோட்டார் வாகன பொறியியலாளர் பயிற்சி நிறுவனம் இல. 07, கலாநிதி டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, ஒருகொடவத்தை, வெல்லம்பிட்டி எனும் இடத்தில் அமைக்கப்பட்டது.

4. நிறுவன நடவடிக்கைகளை மேலும் விரிவாக்கம் செய்வதற்காக 1990 இல் 20ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்விச் சட்டத்தின் பிரிவு ii இன் கீழ் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையாக தாபிக்கப்பட்டது.

5. பின்னர் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் நிர்வாகம் மாகாணக் காரியாலயங்களாக பரவலாக்கம் செய்யப்பட்டதுடன் மேலும் மாவட்டக் காரியாலயங்கள் மற்றும் தொகுதி அலுவலகங்களாகவும் படிப்படியாக பரிணாமம் பெற்றது.

6. மூன்றாம் நிலை கல்விச் சட்டத்தின் பிரகாரம் பொறியியல் பட்டப்படிப்பு நிறுவனம் ஒன்று மற்றும் மூன்றாம் நிலை கல்வி நிறுவனம் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் உயர் டிப்ளோமாவிற்கான உரிய இயந்திரப் பொறிமுறைப் பயிற்சியும் வழங்கப்படுகின்றது.

7. நான்காவது தேசிய பயிலுநர் நிறுவனம் ஜேர்மன் குடியரசின் GIZ மற்றும் KFW நிறுவனங்களின் நிதி உதவியின் கீழ் கிளிநொச்சியில் ஆரம்பிப்பதற்கு 2014 டிசம்பர் 4ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டது.

8. 2014 முதல் ஏனைய தொழிற் பயிற்சி நிறுவனங்களில் நிறுவனப் பயிற்சியினைப் பூர்த்தி செய்தவர்களுக்கான ஆறு மாத கால தொழிற்றுறைப் பயிற்சி அதிகார சபை மூலம் வழங்கப்படுகின்றது. விசேடமாக தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களில், இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் ஏனைய ஏற்றுக் கொள்ளப்பட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தொழிற்றுறைப் பிரிவில் பிரயோகப் பயிற்சி பெற்றுக் கொள்வதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக இப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

9. நான்காவது தேசிய பயிலுநர் நிறுவனமாக இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம் 2016 ஜூலை 18ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

அறிமுகம்

சட்டபூர்வ கட்டமைப்பு

1971ஆம் ஆண்டு 49ஆம் இலக்க தேசிய பயிலுநர் சட்டத்தின் கீழ் தேசிய பயிலுநர் சபை ஆரம்பிக்கப்பட்டு 1990ஆம் ஆண்டு 20ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்விச் சட்டத்தின் பிரிவு ii இன் கீழ் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையாக நிறுவப்பட்டது.

தன்னுடைய கடமைகளை முறையாகச் செய்து பெருமையுடன் 47 ஆண்டுகளைக் கடக்கும் எமது அதிகார சபையில் 1971 முதல் 2018 வரை தொழிற் பயிற்சி அளிக்கும் துறையில் வந்த பயணத்திற்கு பாரிய பலம் சேர்த்த அங்கத்தவர்கள் பற்றி துளியேனும் குறிப்பிட விருப்பப்படுகின்றோம்.

1. <u>பயிற்சிப் பிரிவு</u>

   ஆட்சேர்ப்பு பிரிவு, பயிற்சி அளிக்கும் பிரிவு, இயந்திரப் பயிற்சிப் பிரிவு, தொழிற்றுறைப் பயிற்சிப் பிரிவு, தொழில் வழிகாட்டல் பிரிவு என்னும் பிரதான பிரிவுகளை உள்ளடக்கிய பயிற்சிப் பிரிவுகள் 25 மாவட்டங்கள் ஊடாக அகில இலங்கை ரீதியாக பயிற்சி நடவடிக்கைகள் திட்டமிடல், மேற்பார்வை செய்தல், ஒருங்கிணைப்பு செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் போன்ற நோக்கங்களை அடைவதற்கு பாடுபடுகின்றது.

2. <u>தரப் பிரிவு</u>

   பாடவிதான அபிவிருத்திப் பிரிவு, தர முகாமைத்துவப் பிரிவு, தேசிய தொழிற் பரிசீலனைப் பிரிவு, தேசிய தொழில் தகுதிகள் பிரிவு, மதிப்பீட்டுப் பிரிவு, சான்றிதழ் பிரிவு போன்ற பிரதான பிரிவுகளை உள்ளடக்கிய தரப் பிரிவு, பயிற்சிப் பிரிவுகள் பயிற்சி நடவடிக்கைகளை மேலும் முறையாக மற்றும் வினைத்திறனாக செய்வதற்குத் தேவையான வளங்களை அபிவிருத்தி செய்து, பயிலுநர்கள் மற்றும் நிறுவனத்தின் தரத்தினை மேம்படுத்துவதற்கு அவசியமான கருவிகளை வழங்கி அதிகார சபையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பெரும் பலத்தினை வழங்குகின்றது.

3. <u>திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு</u>

   சகல மாவட்டக் காரியாலயங்கள், தேசிய நிறுவனம், நிர்வாகம் தர, நிதி மற்றும் பயிற்சி போன்ற சக பிரிவுகளையும் உள்ளடக்கி அவற்றின் முன்னேற்றம் தகவல் முகாமைத்துவ அமைப்பினூடாக பெற்றுக் கொண்டு மாதாந்த முன்னேற்ற அறிக்கை, காலாண்டு அறிக்கை, வருடாந்த அறிக்கை மற்றும் தேவைகளுக்கு ஏற்ப ஏனைய அறிக்கைகளை உருவாக்கி உரிய அமைச்சு உட்பட ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு தேவைகளுக்கு அமைவாக தகவல்கள் வழங்கி தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் வெளிச் சூழலுடன் ஒருங்கிணைந்து செயற்படுகின்றது. மேலும் அதிகார சபை செயற்பாடுகளை முறையாக செயற்படுத்துவதற்கு அவசியமான கூட்டாண்மைத் திட்டம், செயற்பாட்டுத் திட்டம் மற்றும் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பல்வேறு முறையில் திட்டங்கள் தயாரித்தல் பிரதான பொறுப்பாகும். அதைப் போன்றே அதிகார சபையின் பயிற்சி மற்றும் பயிற்சி தொடர்பான மேற்பார்வை செய்தல் மற்றும் மீளாய்வு செய்தல் என்பன இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் பயிற்சிக்குரிய அனைத்துத் தகவல்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பாக தகவல்களை சேகரித்தல் போன்ற முகாமைத்துவ அமைப்பை தயாரித்தல் மற்றும் நிர்வாகம் செய்தல் இப் பிரிவின் முக்கிய செயற்பாடுகளாகும்.

4. நிர்வாகப் பிரிவு

உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புப் பிரிவு, போக்குவரத்துப் பிரிவு, கட்டுமான மற்றும் பராமரிப்புப் பிரிவு, சட்டப் பிரிவு, உத்தியோகத்தர் பயிற்சிப் பிரிவு போன்ற பிரதான பிரிவுகளை உள்ளடக்கியதுடன் மனித வள மற்றும் ஏனைய பௌதிக வளங்களை வினைத்திறனாகக் கட்டுப்படுத்தல் (நிர்வகித்தல்) மற்றும் பயன்படுத்தி முன்னேறுவதற்கு பாரிய பலத்தினை வழங்குகின்றது.

5. நிதிப் பிரிவு

கொள்முதல் பிரிவு, களஞ்சியப் பிரிவு, கொடுப்பனவு பிரிவு, சம்பளப் பிரிவு மற்றும் கணக்குப் பதிவுப் பிரிவு போன்ற போன்ற பிரதான பிரிவுகளை உள்ளடக்கியதுடன் வருடாந்தம் திட்டமிடல் பிரிவின் மூலம் தயாரிக்கப்படுகின்ற கூட்டாண்மைத் திட்டம், மற்றும் செயற்பாட்டுத் திட்டத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படுகின்ற வருடாந்த வரவு செலவு அறிக்கையினை முறையாக செயற்படுத்தி நிறுவனத்தின் சகல செயற்பாடுகளுக்கும் நேரடி உணர்வினை ஏற்படுத்துவதற்கு முக்கிய பங்களிப்பை வழங்குகின்றது.

6. கணக்காய்வுப் பிரிவு

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை செயற்படுத்தி, கணக்காய்வுத் திணைக்களம் உரிய அமைச்சு உட்பட ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படும். உள்ளக நிர்வாகம் மற்றும் நிறுவன நடவடிக்கை செயற்பாடுகளின் வெளிப்படைத் தன்மையை முறையாகப் பேணுவதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஒருங்கிணைப்பு மற்றும் முகாமைத்துவத்திற்குத் தேவையான தகவல்களை வழங்கி பாரிய கடமையை ஆற்றுகின்றது.

எமது நோக்கு

மனித வள அபிவிருத்தியின் ஊடாக, இலங்கை செழுமையை அடைவதற்கு, தாக்கமுள்ள பங்களிப்பினைச் செய்து அதி திறன் பயிற்சியினை வழங்கும் அமைப்பாக உருபெறுதல்.

எமது ஏற்புப் பணி

கைத்தொழிற் துறையிலான தேர்ச்சி பெற்ற மனிதவலுத் தேவைக்கு முகம் கொடுக்கும் வகையில், உயர்ந்த தொழிற்சார் நியமங்களுடனான, நன்றே உருவாக்கப்பட்ட தேர்ச்சிகளை தன்னகத்தே கொள்வதற்காய், இளம் பராயத்தினருக்கு

வாழ்தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சியை

வழங்குதல்.

2018 .....

கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சி	24,283
நிலைய அடிப்படையிலான இரட்டைப் பயிற்சி	5,639
தேசிய நிறுவனம்	1,688
பகுதி நேரப் பாட நெறிகள்	1,568
வெளிக்களப் பயிற்சி (வேறு பயிற்சி நிறுவனங்கள்)	8,749
விசேட கைத்தொழில் பயிற்சி	8,994



- இவ் வருடத்தினுள் 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. அவை Dreamron (Pvt), Insee Cement Pvt, Tokyo Cement Limited, National Institute of Mental Health ஆகியவற்றுடன் கைச்சாத்திடப்பட்டவையாகும்.
- சிறப்பு அங்காடிகளுக்கு உரிய ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக அமைச்சர் சரத் அமுனுகம அவர்களின் யோசனைக்கு அமைய Food City, Keels Super, Laughs மற்றும் Spar Super Markets உடன் எமது நிறுவனம் பயிற்சி வழங்கும் சந்தர்ப்பங்களை விஸ்தரித்துள்ளது.
- 25000 வேலைவாய்ப்பு செயற்றிட்டம் இவ் வருடத்தினுள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.




- நிறுவனங்களுக்காக பயிலுநர்களை இணைத்துக் கொள்வதை இரட்டிப்பாக்கும் வேலைத் திட்டம் மற்றும் ஹோட்டல் துறை, மோட்டார் வாகனப் பழுது பார்க்கும் துறை, கட்டிடங்கள் மற்றும் நிர்மாணத் துறை, வைத்திய மற்றும் சுகாதார விடயத் துறை போன்ற 4 துறைகளை அடிப்படையாகக் கொண்டு நாடு பூராவும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.
- பயிலுநர் பயிற்சியில் இரண்டு மாத அடிப்படைப் பயிற்சி வழங்க வேண்டியது கட்டாயமான பிரிவாக ஆக்குதல் மற்றும் மாவட்ட ரீதியில் ஆரம்பப் பயிற்சி நிலையங்கள் அமைத்தல் தலைவரின் யோசனையாக இவ் வருடத்தில் செயற்படுத்தப்பட்டது.



- NAITA பயிற்சி தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அங்கீகாரத்தை அதிகரிக்கும் முகமாக Nantong Shipping School China உடன் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.



- முச்சக்கரவண்டி ஓட்டுநர்களுக்காக தொழிற் பயிற்சி வழங்கும் தேசிய வேலைத்திட்டம் "மூன்று சக்கரத்திலிருந்து நான்கு சக்கரத்திற்கு" என்ற தொனிப்பொருளில் நாடு பூராகவும் ஆரம்பிக்கப்பட்டது.
- எமது நிறுவனம் தேசிய தொலைக்காட்சியுடன் இணைந்து விசேட "நுக செவன" நிகழ்ச்சித் திட்டத்தை 17.02.2018 அன்று ஹெட்டிபொலவில் நடாத்தியது. அங்கு ஹோட்டல் துறைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.
- எமது நிறுவனம் சுயாதீன தொலைக்காட்சியுடன் இணைந்து விசேட "தொரமடலாவ" நிகழ்ச்சி பிரதிப் பணிப்பாளர் ஜீ. எச். நிலந்த டீ சில்வாவின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.
- தேசிய தொலைக்காட்சியுடன் இணைந்து "சங்ஹித" விசேட நிகழ்ச்சி உப தலைவரின் தலைமையில் 22.10.2018 இல் நடாத்தப்பட்டது.
- நாடளாவிய ரீதியான பிரச்சார வேலைத் திட்டமான பொது இடங்களிலும் பேருந்து வண்டிகளிலும் NAITA ஸ்டிக்கர் ஒட்டும் வேலைத் திட்டம் இவ் வருடத்தினுள் ஆரம்பிக்கப்பட்டது.
- வைத்தியத் துறையில் பயிலுநர் பயிற்சியை விஸ்தரிப்பதற்காக களுத்துறை மாவட்டத்தில் காணப்படும் தனியார் வைத்தியசாலைகளுடன் தலைவரின் தலைமையில் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது. அதே போன்றே ஹோட்டல் துறையில் பயிலுநர் பயிற்சியை விஸ்தரிப்பதற்காக களுத்துறை மாவட்டத்தில் காணப்படும் ஹோட்டல் முகாமையாளர்களுடன் தலைவரின் தலைமையில் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது.


மாவட்ட அலுவலகம் மற்றும்
தேசிய நிறுவகங்கள்
தலைமை அலுவலகம்
மாவட்ட அலுவலகம்
தேசிய நிறுவகங்கள்
யாழ்பாணம்
கிளிநொச்சி
முல்லைத்தீவு
மன்னார்
வவுனியா
அநுராதபுரம்
திருகோணமலை
புத்தளம்
பொலனறுவை
மாத்தளை
மட்டக்களப்பு
குருநாகலை
கண்டி
கட்டுநாயக்கா
கேகாலை
அம்பாறை
கம்பஹா
பதுளை
நுவரெலியா
ஏறுகொடவத்தை
மொனராகலை
கொழும்பு
தலைமை அலுவலகம்
கட்டுபெத்தை
இரத்தினபுரி
களுத்துறை
காலி
தங்காலை
மாத்தறை

	பிரதான அலுவலகம் 971, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மாவத்தை வெலிக்கடை, இராஜகிரிய தொ.பே. 011-2888782-7
01	**பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம்** 18ஆம் கட்டை, விகாரை வீதி கட்டுநாயக்க தொ.பே. 011-2252833
02	**கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனம்** இல. 581, காலி வீதி, கட்டுப்பெத்தை மொரட்டுவை தொ.பே. 011-2647393, 011-2643847
03	**மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனம்** இல. 69ஏ, பேஸ்லைன் வீதி ஒருகொடவத்தை, வெல்லம்பிட்டி தொ.பே. 011-2572977
04	**இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம்** அறிவியல் நகர், கிளிநொச்சி தொ.பே. 021-4927799, 021-2060137
	அம்பாறை மாவட்ட அலுவலகம் இல. 06 ஜீ. எஸ். குறுக்கு வீதி கல்முனைக்குடி 13, கல்முனை தொ.பே. 067-2229357
	அனுராதபுரம் மாவட்ட அலுவலகம் விமான நிலைய மாவத்தை, அனுராதபுரம் தொ.பே. 025-2223178
	பதுளை மாவட்ட அலுவலகம் இல. 4/10, மல்வத்தை வீதி, பதுளுபிட்டிய, பதுளை தொ.பே. 055-2230644
	மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் இல. 294, புதிய கல்முனை வீதி, மட்டக்களப்பு தொ.பே. 065-2228130
	கொழும்பு மாவட்ட அலுவலகம் இல. 242, ஹவ்லொக் நகர் கொழும்பு 05 தொ.பே. 011-2587258, 011-2597671
	காலி மாவட்ட அலுவலகம் இல. 393, வக்வெல்ல வீதி, பூல்கஹ காலி தொ.பே. 091-2235628
	கம்பஹா மாவட்ட அலுவலகம் இல. 61/5, மினுவாங்கொடை வீதி கம்பஹா தொ.பே. 033-2232874
	ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகம் இல. 39, பள்ளிக்குடா வீதி தங்காலை தொ.பே. 047-2241512
	யாழ்ப்பாணம் மாவட்ட அலுவலகம் இல. 44, சோமசுந்தரம் அவனியு சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் தொ.பே. 021-2222383
	களுத்துறை மாவட்ட அலுவலகம் இல. 326/2, 3ஆம் தளம், பிரதான வீதி காலி வீதி, களுத்துறை தெற்கு தொ.பே. 034-2224239

	கண்டி மாவட்ட அலுவலகம் இல. 108/2/பி, திவங்க போதி மாவத்தை கண்டி தொ.பே. 081-2201918
	கேகாலை மாவட்ட அலுவலகம் பண்டாரநாயக்க மாவத்தை, பல்லபான கலிகமுவ தொ.பே. 035-2284931
	கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் கண்டி வீதி, ஆனந்தபுரம் கிளிநொச்சி தொ.பே. 034-3942824
	குருநாகல் மாவட்ட அலுவலகம் நீர்கொழும்பு வீதி, மல்கடுவாவ குருநாகல் தொ.பே. 037-2223789
	மாத்தறை மாவட்ட அலுவலகம் இல. 27 ஏ, திறந்த பல்கலைக்கழக வீதி நூபே, மாத்தறை தொ.பே. 041-2226958
	மன்னார் மாவட்ட அலுவலகம் இல. 952/1, நல்லையார் வீதி, பழைய சோனகத் தெரு மன்னார் தொ.பே. 023-2223404
	மாத்தளை மாவட்ட அலுவலகம் இல. 11, விகாரை வீதி, மந்தண்டாவளை மாத்தளை தொ.பே 066-2223173
	மொனராகலை மாவட்ட அலுவலகம் நீதிமன்ற வளாகம் மொனராகலை தொ.பே 055-2223702
	முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம் மாங்குளம் வீதி, முள்ளியவளை முல்லைத்தீவு தொ.பே 021-2061012
	நுவரெலியா மாவட்ட அலுவலகம் இல. 116, கோவில் வீதி, ஹாவா எலிய நுவரெலியா தொ.பே 052-2223702
	பொலன்னறுவை மாவட்ட அலுவலகம் இல. 103, நீர்ப்பாசனப் பிரதேசம் புதிய நகரம், பொலன்னறுவை தொ.பே 027-3223023
	புத்தளம் மாவட்ட அலுவலகம் மோலவத்தை, மெதகம வீதி மாதம்பை தொ.பே 032-2248250
	இரத்தினபுரி மாவட்ட அலுவலகம் இல. 642, வித்தியாலய மாவத்தை, புதிய நகரம் இரத்தினபுரி தொ.பே 045-2228667
	திருகோணமலை மாவட்ட அலுவலகம் இல. 103/7, தபால் அலுவலக வீதி திருகோணமலை தொ.பே 026-2226569
	வவுனியா மாவட்ட அலுவலகம் ஓப் பார்க் வீதி வவுனியா தொ.பே 024-2224679

நிறுவனத் தகவல்கள

2018 ஜூன் முதல் செப்டம்பர் வரை

1. வைத்தியர் சாரங்க அழகப்பெரும
தலைவர்
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை
971, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மாவத்தை
வெலிக்கடை, இராஜகிரிய

2. 02. திரு. ஜகத் இராமநாயக்க
உப தலைவர்
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை
971, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மாவத்தை
வெலிக்கடை, இராஜகிரிய

3. திருமதி ஜே.எம்.சீ.எம். ஜயவர்த்தன
பணிப்பாளர் நாயகம்
மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு
354/2, எல்விட்டிகல மாவத்தை
கொழும்பு 05 (2018 ஓகஸ்ட் வரை)

4. திரு ஜே.ஏ.டீ.ஜே. ஜயலத்
பணிப்பாளர் நாயகம் (பதில் கடமை)
மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு
354/2, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 05. (2018 செப்டம்பர் மட்டும்)

5. திரு பீ.சீ.பீ. ஜயதிலக
இல. 304/1, முதலாம் மாடி
கேட்போர் கூட கட்டிடம்
யூனியன் பிளேஸ், கொழும்பு 02

6. திருமதி டீ. அனுராதா எல். இலேபெரும
மேலதிக செயலாளர் (நிர்வாகம்)
திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி
இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை
கொழும்பு 05.

7. திரு நாமல் வீரசேன
இல. 1029/டீ, கொட்டாவ கிழக்கு
பன்னிப்பிட்டி

8. திரு ராகுல சேனாநாயக்க
இல. 185/2, லும்பினி குறுக்குத் தெரு
வேவல்துவ, களனி

9. திரு ரோகண கமகே
இல. 35/பி, மாபோலை
வத்தளை

10. திரு பீ.ஏ.கே. குணவர்த்தன
இல. 44/1, ஹீநெட்டிகும்புர வீதி
தலங்கம (வடக்கு)
பத்தரமுல்லை.

11. திரு எஸ்.ஏ. உபாலி செனரத் பெரேரா
"சிரி லக்"
கொம்பிட்டிய வீதி
கொடகவெல

12. திரு எம்.ஏ.வீ.என்.ஆர்.விஜேகுணவர்த்தன
இல. 31, ரணவிரு சம்பத் மாவத்தை
பொல்ஹேங்கொட
இரத்தினபுரி

13. திருமதி எம்.ஜீ.என். பிரேமதிலக
பிரதான உள்ளக கணக்காய்வாளர்
நிதி அமைச்சு
செயலாளர் அலுவலகம், கொழும்பு 01

2018 ஏப்ரல் வரை

01. திரு ஷெஹான் செனவிரத்ன
தலைவர்
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை

02. வைத்தியர் சாரங்க அழகப்பெரும
உப தலைவர்
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை
(2018 பெப்ரவரி வரை)

03. திரு. ஜகத் இராமநாயக்க
உப தலைவர்
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை
(2018 மார்ச்சிலிருந்து)

04. திருமதி ஜே.எம்.சீ.எம். ஜயவர்த்தன
பணிப்பாளர் நாயகம்
மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு
இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை
கொழும்பு 05

05. கலாநிதி இஷாந்த சிரிபத்தன
இல. 18/2, பலபொக்குண பிரதேசம்
கொழும்பு 06

06. திரு எம். ஜீ. ஜயசேன
'சஷி' மஹவத்தை வீதி
ஹிக்கடுவ

07. சட்டத்தரணி அஷாந்தி வீரசிங்க
இல. 33, துட்டுகெமுனு மாவத்தை
தெஹிவளை

08. சட்டத்தரணி துமிந்த ராஜபக்ஷ
இல. 24 லேனா பாழ வீதி
கோட்டை, காலி

09. திரு ஆர்.பீ.கே. லியனகே
இல. 82/2, வக்வெல்ல வீதி
காலி

10. திரு சமந்த ராஜபக்ஷ
இல. 56, 5ஆம் ஒழுங்கை
நாவல

11. திரு ஆர்.பீ. குக்குளேவிதான
"நந்தன" இல. 86/6 ஏ, செனெலி கமகே மாவத்தை
கட்டுவாவல வீதி
மஹரகம

12. திரு எம்.எல். ரோகண ஜயசுந்தர
இல. 195, ஹபுகல
வக்வெல்ல
காலி

13. சட்டத்தரணி டப்.எம்.கே.எல். வீரசிங்க
இல. 286/7, கெமுனு மாவத்தை
கொட்டுவேகொட
இராஜகிரிய

14. திரு டீ.டீ.கே. ராஜபக்ஷ
இல. 11, சந்திரா வெத்தசிங்க மாவத்தை
கொஸ்வத்தை
நாவல

15. திரு நாமல் வீரசேன
இல. 1029/டீ, கொட்டாவ கிழக்கு
பன்னிப்பிட்டி

16. ஈ.ஏ. கணிஷ்க பிரணாந்து
இல. 53, பீ.பி. அல்விஸ் பெரேரா மாவத்தை
கட்டுப்பெத்தை
மொரட்டுவை

17. திருமதி எம்.ஜீ.என். பிரேமதிலக (மேற்பார்வை)
பிரதான உள்ளக கணக்காய்வாளர்
நிதி அமைச்சு
செயலாளர் அலுவலகம்
கொழும்பு 01

பணிப்பாளர் சபை உத்தியோகத்தர்கள்


01.	திரு ஜே.சீ.கே. பஸ்நாயக்க	- பணிப்பாளர் நாயகம் (பதில் கடமை) (05.10.2018 வரை)
02.	திரு பீ.ஆர். ரொட்ரிகோ	- பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் மேற்பார்வை)
03.	திருமதி என்.எஸ். நிஷங்க	- பணிப்பாளர் (பயிற்சி)
04.	திரு எஸ். ஜயசிங்க	- பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளம்)
05.	திரு ஜீ.டப்.டீ.பீ. சேனாநாயக்க	- பணிப்பாளர் (நிதி)
06.	திருமதி ஆர்.எம்.ஏ.பீ. சமரதிவாகர	- பணிப்பாளர் (தரம்)
07.	திருமதி ரீ.பீ.கே. பெரேரா	- பணிப்பாளர் (மனித வளம் மற்றும் தர முகாமை)
08.	திரு ஜீ.எச்.வீ.என்.டப். டீ சில்வா	- பிரதிப் பணிப்பாளர் (பயிற்சி)
09.	திரு சீ.பீ. சுபசிங்க	- உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) மற்றும் (பராமரிப்பு மற்றும் சிவில்) பதில் கடமை
10.	திரு எஸ்.வீ.பீ. விக்ரமசிங்க	- உதவிப் பணிப்பாளர் (மதிப்பீடு)
11.	திரு ஏ.எச்.எஸ்.பீ. விஜேரத்ன	- உதவிப் பணிப்பாளர் (மேற்பார்வை)
12.	திரு டப்.ஏ.கே.எஸ். குமார	- உதவிப் பணிப்பாளர் (வெளிக்களப் பயிற்சி) மற்றும் (பயிற்சி) பதில் கடமை
13.	திரு ஏ.ஜே. பத்திரன	- உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்)
14.	திரு எம்.எல்.பீ. பிரணாந்து	- உதவிப் பணிப்பாளர் (தொழில் வழிகாட்டல் மற்றும் சந்தைப்படுத்தல்)
15.	திரு ஆர்.டப்.எம்.ஏ.ஜே. ரத்னாயக்க	- உதவிப் பணிப்பாளர் (மனித வள முகாமைத்துவம்)
16.	திரு ரீ.எஸ்.பீ.ஏ. விக்ரமசிங்க	- உதவிப் பணிப்பாளர் (மனித வள அபிவிருத்தி)
17.	திரு என்.டீ.பீ. உஸ்கொடாராச்சி	- உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் வழங்கல்)
18.	திருமதி யூ.எம். பிரபோஷினி	- உதவிப் பணிப்பாளர் (நிதி)
19.	திருமதி என்.டப்.என். சந்தமாலி	- உள்ளகக் கணக்காய்வாளர்
20.	திரு எம்.எச். ஷாஜகான்	- உதவிப் பணிப்பாளர் (தொகுதி)
21.	திரு ஜீ.பீ. சுனில்	- உதவிப் பணிப்பாளர் (தேசிய திறன் தரநிலை)
22.	திருமதி டப்.ஏ.பீ. அல்விஸ்	- உதவிப் பணிப்பாளர் (சான்றிதழ்)
23.	திருமதி பீ.எம். விதானகே	- உதவிப் பணிப்பாளர் (பயிற்சி சேவை)
24.	திரு டீ.ஆர். சபுதந்திரி	- பணிப்பாளர் / அதிபர் IET
25.	திருமதி பீ.எம். குமாரசிங்க	- பணிப்பாளர் / அதிபர் IETI
26.	திருமதி எச்.ஏ.என்.டீ. குமாரி	- பணிப்பாளர் / அதிபர் AETI
27.	திரு எஸ். அர்வின்	- பணிப்பாளர் / அதிபர் SLGTI

மாவட்ட முகாமையாளர்கள்

1.	திரு ஏ. மசூர்	-	அம்பாறை
2.	திருமதி டீ.டீ. பியலத்	-	கேகாலை
3.	திரு எம்.ஆர்.டீ.ஏ.எஸ். குணரத்ன	-	களுத்துறை
4.	திரு எம்.ஆர்.டீ.ஏ.எஸ். குணரத்ன	-	கொழும்பு
5.	திரு எஸ்.டீ. அபேவிக்ரம	-	ஹம்பாந்தோட்டை
6.	திரு வை.எஸ். பியதிலக்க (பதில் கடமை)	-	இரத்தினபுரி
7.	திரு பீ.கே.பீ. குணவர்த்தன	-	பதுளை
8.	திரு ஏ.ஜீ.டீ. விஜேரத்ன (பதில் கடமை)	-	கம்பஹா
9.	திரு பீ. நாரங்கொட	-	காலி
10.	திரு பி.எம்.ஜே.எஸ்.கே. ரணராஜா	-	மாத்தளை
11.	திரு கே. கிருஷ்ணபாலன்	-	யாழ்ப்பாணம்
12.	திரு எஸ். பவளநாதன்	-	வவுனியா
13.	திரு யூ.எம்.கே. நாணயக்கார	-	மாத்தறை
14.	திரு எஸ்.ஏ.எம்.எஸ்.எம். சலீம் மௌலானா	-	மட்டக்களப்பு
15.	திரு எஸ். வீனஸ்	-	மன்னார்
16.	திரு வை. யோகேஸ்வரன் (பதில் கடமை)	-	கிளிநொச்சி
17.	திரு பி.ஏ.யூ.ஏ. கருணாரத்ன	-	கண்டி
18.	திரு ஜே. உதயவர்த்தன (பதில் கடமை)	-	புத்தளம்
19.	திரு எஸ்.பீ.சீ.ஜே. மைத்திரிதாச (பதில் கடமை)	-	மொனராகலை
20.	திரு ஓ.கே.ஜீ.ஏ.சீ. சமன்குமார (பதில் கடமை)	-	அனுராதபுரம்
21.	திரு யூ.ஜீ.என். சமீர (பதில் கடமை)	-	பொலன்னறுவை
22.	திரு எஸ். சிவகௌரி (பதில் கடமை)	-	முல்லைத்தீவு
23.	திரு யூ.டீ.எச். டீ சில்வா (பதில் கடமை)	-	நுவரெலியா
24.	திரு கே. பத்மநாதன் (பதில் கடமை)	-	திருகோணமலை
25.	திரு ஆர்.எம்.என்.எஸ்.கே. ரத்னாயக்க	-	குருநாகல் (பதில் கடமை)

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை

நிறுவனக் கட்டமைப்பு



அதிகார சபையின் நோக்கங்கள்

நிறுவனமயமாக்கல் சட்டத்தின் இல. 37(1) பந்திக்கு அமைய அதிகார சபையின் நோக்கங்கள் பின்வருமாறு அமையும்.

a) தொழிற் பயிற்சியினை திட்டமிடல், ஒழுங்கு செய்தல் மற்றும் வழங்குதல்

b) தொழிற் பயிற்சிக்குரிய பயிற்சித் தரங்களைத் தீர்மானித்தல்

c) தொழிற் பயிற்சிக்கு அமைவாக பரீட்சைகள் நடாத்துதல் மற்றும் சான்றிதழ் மற்றும் வேறு கொடுப்பனவுகள் வழங்கல்

d) தேசிய வல்லுநர் மதிப்பீட்டு சோதனையை நடாத்துதல்

e) தொழிற் பயிற்சி பற்றிய மதிப்பீட்டு சோதனை மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளல்

f) பல்வேறு ஆற்றல்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக போட்டிகள் நடாத்துதல்

g) தொழிற் பயிற்சி வழங்கும் நிறுவனங்களில் மற்றும் வேறு நிறுவனங்களில் பயிற்சி வழங்கும் திறனை அபிவிருத்தி செய்தல்

h) தொழிற் பயிற்சி வழங்குதல் தொடர்பாக தொழிற் பயிற்சி ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்கல்

i) ஒரே நோக்கமுடைய இலங்கையில் மற்றும் வெளிநாடுகளில் அமைந்துள்ள நிறுவனங்களுடன் இணைப்பை ஏற்படுத்தி சான்றிதழ்கள், டிப்ளோமாக்கள் மற்றும் பட்டங்களை சமானமாக்குதல் மற்றும் வலிதாக்குவதற்கான நடவடிக்கை எடுத்தல்

அதிகார சபையின் பிரதான செயற்பாடுகள் / வேலைத்திட்டங்கள்

ய) அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து கைத்தொழில் சார்ந்த பயிலுநர் பயிற்சி வழங்கும் 4 பயிற்சி நிறுவனங்கள் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள பயிலுநர் பயிற்சி நிலையங்கள் மூலம் இரட்டைப் பயிற்சி வழங்கல்

டி) வேறு தொழிற் பயிற்சி பெறுபவர்களுக்காக பல்வேறு நிறுவனங்களில் ஈடுபடுத்தி வெளிக்களப் பயிற்சி வழங்கல்

உ) மொரட்டுவை, பேராதனை மற்றும் றுகுணு பல்கலைக்கழகங்களில் பொறியியல் பட்டதாரிகளுக்கு மற்றும் ஏனைய டிப்ளோமாக் கற்கை மாணவர்களுக்கு தேவையான இயந்திரப் பொறிமுறைப் பயிற்சி பெற்றுக் கொடுத்தல்

ன) ஒழுங்கற்ற முறையில் திறன்களைப் பெற்றுக் கொண்ட கைத்தொழில் வினைஞர்களுக்கு முன்பு கற்றவற்றுக்கான அங்கீகார மதிப்பீட்டு முறையில் தேசிய தொழிற் தகைமைகள் சான்றிதழ் வழங்கல், தொழில்களுக்கு ஏற்ற வகையில் தகுதிச் சான்றிதழ் வழங்கல் மற்றும் உரிய தேசிய தொழிற் சோதனைகளை நடாத்துதல்

ந) தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பயிலுநர்களைப் பயிற்றுவித்தல்

க) பாடசாலை மாணவர்கள், பாடசாலையை விட்டு விலகிய மற்றும் ஏனைய இலக்கு குழுவினருக்கு தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துதல்

பயிற்சி முறை மற்றும் ஏனைய பிரதான வேலைத் திட்டங்கள்

பயிற்சி முறையினை பிரதானமாக கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சி, நிலைய அடிப்படையிலான இரட்டைப் பயிற்சி, இயந்திரப் பொறிமுறைப் பயிற்சி, வெளிக்களப் பயிற்சி என வகைப்படுத்த முடியும்.

கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சி

நிறுவனம் மூலம் நடாத்தப்படும் பயிற்சி செயற்பாடுகளிடையே பிரதான பயிற்சி முறை இதுவாகும். அத்துடன் கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சி வழங்குவதற்கு அதிகாரமுடைய ஒரே அரச நிறுவனம் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையாகும். இந்தப் பயிற்சி முறையில் பயிற்சி பெறுபவர்கள் பயிற்சிக் காலத்தினுள் வேலை செய்வதன் மூலம் கற்று தேவையான திறன்களைப் பெற்றுக் கொள்வதுடன் அந்த அந்த கைத்தொழில்களுக்காக அவன் அல்லது அவள் நியமிக்கப்படுவர்.

இதன் போது பயிலுநர் ஒருவருக்கு கீழ்க்குறிப்பிடப்படும் ஏதேனும் ஒரு முறையில் பயிற்சியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

i. கைத்தொழில் வல்லுநர் பயிலுநர் பயிற்சி
ii. தேசிய தொழிற் தகைமைகள் சான்றிதழ் முறை
iii. சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்ட பயிலுநர் பயிற்சி
iv. கிராமிய மட்ட பயிலுநர் பயிற்சி

- **கைத்தொழில் வல்லுநர் பயிலுநர் பயிற்சி**

ஒவ்வொரு துறைக்கும் விசேடமான தேசிய பயிற்சி மற்றும் கைத்தொழில் ஆலோசனைச் சபை (NITAC) மூலம் ஒவ்வொரு துறைக்கும் பயிற்சி தரவுகள் வடிவமைக்கப்பட்டு அப் பயிற்சி தரங்களுக்கு அமைவாக பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கைத்தொழில் உரிமையாளர்கள் மற்றும் பயிலுநர் இடையே ஒப்பந்தத்திற்கு வந்த பின் ஒவ்வொரு நிறுவனங்களிலும் பயிலுநர் பயிற்சியை ஆரம்பிக்க முடியும்.

- **தேசிய தொழிற் தகைமைகள் சான்றிதழ் முறை (NVQ)**

பயிலுநர் பயிற்சியின் கீழ் 51 தொழில்களை அடிப்படையாகக் கொண்டு 2016ஆம் ஆண்டு முதல் இம் முறைமை ஆரம்பிக்கப்பட்டது. இம் முறையில் கைத்தொழில் வல்லுநர் பயிலுநர் முறையில் கைத்தொழில் உரிமையாளர்கள் மற்றும் பயிலுநர் இடையே ஒப்பந்தத்திற்கு வந்த பின் ஒவ்வொரு நிறுவனங்களிலும் பயிலுநர் பயிற்சியை ஆரம்பிக்க முடியும். இந்த முறையில் பயிற்சி நிறுவனம் / கைத்தொழில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவின் கீழ் அங்கீகாரம் பெறுதல் வேண்டும் என்பதுடன் பயிலுநர்களை அடிக்கடி மதிப்பீடு செய்தல் வேண்டும். பயிற்சியின் இறுதியில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டாளர்களினால் இறுதி மதிப்பீட்டு சோதனை செய்து அவ்வவ் மட்டத்திற்கான சான்றிதழ் வழங்கப்படும்.

- **சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்ட பயிலுநர் பயிற்சி**

இப் பயிற்சி முறையின் கீழ் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் அமைய தொழில் பயிற்சியைப் பெறுவதற்கு பயிலுநர்களை ஈடுபடுத்துவதுடன் உரிய பயிற்சித் தரங்கள் தொடர்புபட்ட நிறுவனம் மற்றும் அதிகார சபையுடன் இணைந்து தயாரிக்கப்படும்.



- **கிராமிய மட்ட பயிலுநர் பயிற்சி**

கைவினை வல்லுநர் மட்ட தொழில்களுக்காக தயாரிக்கப்பட்ட பயிற்சித் தரங்களுக்கு அமைய பயிற்சியினை வழங்க முடியாத பயிலுநர்களுக்கு கிராமியப் பயிற்சி வசதிகளை உபயோகித்து கிராமிய மட்டத்தில் இருக்கும் பயிலுநர்களுக்கு பயிற்சியினை வழங்குவதனை இலக்காகக் கொண்டு கிராமியப் பயிலுநர் பயிற்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான பயிற்சித் தரங்கள் அந் நிறுவனங்களுடன் கலந்துரையாடி அதிகார சபை மூலம் தயாரிக்கப்படும்.

கைத்தொழில் சார்ந்த கைவினை வல்லுநர் பயிலுநர்கள் மற்றும் தேசிய தொழிற் தகைமைகள் சான்றிதழ் பெறுபவர்களுக்கு உரிய கோட்பாட்டு அறிவு பயிற்சி மூலம் மற்றும் தொலைக்கல்வி மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் பயிலுநர்களுக்குத் தேவையான கோட்பாட்டு மற்றும் பிரயோக அறிவு குறிப்பிட்ட காலப் பகுதியில் உரிய பயிற்சி நிலையத்தின் மூலம் வழங்கப்படுவதுடன் மேலும் அவர்களுக்குப் பாட விடயங்கள் சுய கற்றலுக்கான வசதிகள் வழங்கப்பட்டு அச்சிடப்படப்பட்ட தபால் மூல பாடநெறி அலகுகளும் அதிகார சபை மூலம் வழங்கப்படும். பாடநெறியின் இறுதியில் காணப்படும் வினாக்கொத்துக்கு பயிலுநர்கள் விடை எழுதி அனுப்பினால் அவை மதிப்பீடு செய்யப்பட்டு மீண்டும் அவர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும்.

அச்சிடப்படப்பட்ட பாடநெறியினைப் பயிலும் போது பயிலுநர்கள் முகங்கொடுக்கும் பிரச்சனைகள் மற்றும் சிரமங்களைத் தீர்ப்பதற்கு அவ்வப்போது வார இறுதி நாட்களில் வகுப்புகள் அதிகார சபை மூலம் ஏற்பாடு செய்யப்படும்.

மேலும் தொழிலுக்கு அமைவாக ஆங்கில அறிவினை வளர்ப்பதற்கு ஆங்கிலப் பாடநெறியும் இப் பயிலுநர்களுக்கு வழங்கப்படும்.

நிறுவனப் பயிற்சி / நிலைய அடிப்படையிலான இரட்டைப் பயிற்சி

இம் முறையின் கீழ் பயிலுநர்கள் நேரடியாக தேசிய பயிற்சி அதிகார சபைக்கு அல்லது பிரதேச பயிற்சி நிறுவனத்திற்கு உரிய காலப்பகுதிக்கு நிர்ணயிக்கப்பட்ட வகையில் இணைத்துக் கொள்ளப்படுவதுடன் அதன் பின் தனியார் அல்லது அரச நிறுவனமொன்றில் வெளிக்களப் பயிற்சிக்காக அனுப்பப்படுவர். பயிற்சி நிறுவனம் அல்லது பயிற்சி நிலையம் மூலம் உரிய கோட்பாட்டு மற்றும் பிரயோக அறிவு வழங்கப்படும். மதிப்பிடப்படும் வருடத்தினுள் அதிகார சபையின் கீழ் நான்கு தேசிய நிறுவனங்களுக்கு மேலதிகமாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் 74 பயிற்சி நிலையங்கள் நடாத்திச் செல்லப்படுகின்றது. இவற்றில் நடாத்தப்படும் பாடநெறிகளுக்கான காலம் 06 மாதங்கள் தொடக்கம் 04 வருடங்கள் வரை வேறுபடும்.



- **இயந்திரப் பொறிமுறைப் பயிற்சி**

1990ஆம் ஆண்டு இல. 20 மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி சட்டத்தின் 38 (சீ) வாசகத்தின் படி மொரட்டுவை, பேராதனை மற்றும் றுகுணு பல்கலைக்கழகங்களில் இளங்கலைப் பட்டதாரிகளின் பொறியியல் பட்டத்திற்காக பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் மூலம் நடாத்தப்படும் டிப்ளோமாக் கற்கை நெறிகளுக்கு உரிய இயந்திரப் பொறிமுறைப் பயிற்சி அதிகார சபை மூலம் பெற்றுக் கொடுக்கப்படும்.

- **வெளிக்களப் பயிற்சி**

ஏனைய தொழிற் பயிற்சி நிறுவனங்களில் நிறுவனப் பயிற்சியைப் பூரணப்படுத்தியவர்களுக்காக ஆறு மாத வெளிக்களப் பயிற்சி அதிகார சபை மூலம் வழங்கப்படும். விசேடமாக தொழிற் பல்கலைக்கழகம், இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மற்றும் ஏனைய ஏற்றுக் கொள்ளப்பட்ட அரச, தனியார் நிறுவனங்களில் தொழிற் பயிற்சி துறையில் பயிற்சி பெற்றவர்களுக்கு தொழிற் பிரிவில் பிரயோகப் பயிற்சியை வழங்குவதற்காக இப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பவியலாளர் பயிலுநர் மற்றும் தேசிய பயிலுநர் சான்றிதழின் கீழ் பயிற்சியைப்

பூர்த்தி செய்த பயிலுநர்களுக்காக இறுதித் தொழிற் பரீட்சை (நிபுணத்துவப் பரிசோதனை) பிரதான அலுவலகத்தின் மதிப்பீட்டுப் பிரிவால் நடாத்தப்படும். அவ்வாறு இருப்பினும் கிளை அலுவலகங்கள் நிறுவப்பட்டவுடன் இச் செயற்பாடுகளை பரவலாக்கம் செய்ய எதிர்பார்க்கப்படுகின்றமையால் தற்போது மூன்று கிளைகளின் கீழ் எடுக்கப்பட்டு கொழும்பு, கம்பஹா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் மாத்திரம் அக் கிளை அலுவலகங்கள் மூலம் இறுதி நிபுணத்துவ மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக தேசிய தொழிற் தகைமைகள் (NVQ) பரிசீலனை மற்றும் தேசிய தொழிற் பரிசோதனை (NTT) தொடர்பான மதிப்பீடும் பிரதான அலுவலகம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

சூழ்நிலைக்கு ஏற்ற மற்றும் கிராமிய மட்டப் பயிலுநர்களுக்காக இறுதித் தொழிற் பரிசோதனை உரிய மாவட்ட அலுவலகங்கள் மூலம் நடாத்தப்படும்.

தேசிய நிறுவனங்கள் அனைத்தினதும் சான்றிதழ்கள் பணிப்பாளர், அதிபர் அல்லது பதிவாளருடன் அதிகார சபையின் தலைவரின் கையொப்பத்துடன் அந்த நிறுவனங்கள் ஊடாக வழங்கப்படும்.



தேசிய தொழிற் சோதனைகள் மற்றும் தேசிய தொழிற் தகைமைகள்

இச் செயற்றிட்டம் மூலம் தொழிற் சோதனைகள் நடத்தி உரிய திறன்கள் உள்ள கைவினைஞர்களுக்கு நிபுணத்துவ தேர்ச்சி சான்றிதழ்கள் வழங்கப்படும். ஒழுங்கற்ற பயிற்சியைப் பெற்று தற்போது வேலை செய்யும் திறமையான நிபுணத்துவ கைவினைஞர்களுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழிற் சான்றிதழ் ஒன்றைப் பெறுவதன் மூலம் மிகவும் நல்ல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொழில்களைப் பெற்றுக் கொள்வதற்கு இம் முறையை அதிகமாகப் பயன்படுத்துகின்றனர்.

தற்போது காணப்படும் தொழிற் சோதனைகள் தரம் III, தரம் II மற்றும் தரம் I என அரைத் திறன், திறன் மற்றும் சிறப்புத் திறன் என்ற மூன்று மட்டத்தில் நடாத்தப்படும்.

தேசிய தொழிற் சோதனை முறை தேசிய திறன் தரநிலை இல்லாத 10 தொழில்களுக்கும் இலங்கை கணனித் திறன் சான்றிதழ் வழங்குவதற்கும் செயற்படுத்தப்படுகின்றது.

தேசிய தொழிற் சோதனை முறை தற்காலத்தில் தேசிய தொழிற் தகைமைகள் சான்றிதழ் முறையின் (NVQ) கீழ் காணப்படும் முன்பு கற்றவற்றுக்கான அங்கீகார மதிப்பீடாக (RPL) மாற்றம் அடைந்து கொண்டு வருகின்றது.

இதற்காக ஒழுங்கற்ற பயிற்சியைப் பெற்று தற்போது வேலை செய்யும் திறமையான கைவினைஞர்களுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக் கொள்வதன் மூலம் மிகவும் நல்ல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொழில்களைப் பெற்றுக் கொள்வதற்கு வழி வகுக்கின்றது.

தேசிய நிபுணத்துவ (திறன்) தரநிலை மேம்பாடு

அதிகார சபை மூலம் தொழிற் பயிற்சி துறையுடன் தொடர்பாக செய்யப்படுகின்ற முக்கிய செயற்பாடாகும். தேசிய திறன் தரநிலை தயாரிக்கும் சட்ட ரீதியான அதிகாரம் சட்டம் மூலம் அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அடையாளம் காணப்பட்ட தொழில்களுக்கு உரிய தேசிய திறன் தரநிலை தயாரித்தல் மற்றும் செல்லுபடியாக்கச் செய்தல் இதன் கீழ் மேற்கொள்ளப்படும்.

தேசிய தொழில்நுட்பப் பயிற்சி பயிற்றுவிப்பாளர் / ஆலோசனைக் குழுவின் மூலம் தயாரிக்கப்படுகின்ற தேசிய திறன் நிபுணத்துவ தரநிலை ஒவ்வொரு தொழிலுக்கு அமைய அபிவிருத்திக் குழுவின் மூலம் அபிவிருத்தி செய்தல் மற்றும் மீளாய்வு செய்தல் இங்கு செய்யப்படுகின்றது.

தேசிய தொழிற் பயிற்சி ஆலோசனைக் குழு ஒவ்வொரு துறைக்கும் மற்றும் தொழிலுக்கும் விசேடமான நபர்களின் திட்டங்களைக் கொண்ட குழுவாக அமைவதுடன் இதுவரை 28 அளவிலான ஆலோசனைக் குழுக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த ஒவ்வொரு குழுவிலும் 16 அங்கத்தவர்கள் உள்ளடங்குவர்.

முயற்சியாண்மை தகைமை அபிவிருத்தி

பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் மற்றும் பயிற்சியினைப் பூர்த்தி செய்த இரு பிரிவினருக்கும் இந் நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்படுகின்றது. இதன் போது பிரதான நோக்கம் பயிற்சியினைப் பூர்த்தி செய்த பின் சுய தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான அறிவு மற்றும் திறன்களை வழங்குதல் என்பனவாகும்.

தொழில் வழிகாட்டல்

பாடசாலையை விட்டு விலகிய மற்றும் பாடசாலை செல்லும் மாணவர்களின் தொழிற் பயிற்சி பற்றி மற்றும் விசேடமாக தொழிற் சந்தை பற்றிய அறிவை வளர்ப்பதற்காக இந் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.



ஊழியர் குழாம் அபிவிருத்தி மற்றும் ஆளுமை அபிவிருத்தி

NAITA நிறுவனத்தின் ஊழியர்களின் திறன்களை அபிவிருத்தி செய்வதற்காக இந் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இந் நிகழ்ச்சித் திட்டம் பல்வேறு கட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அவர்களின் தொழிற் செயற்பாடுகளில் ஏற்படும் தடைகளைக் குறைக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

தரவு விளக்கம்

அட்டவணை 01 – பயிற்சி வழங்கும் நடவடிக்கைகளின் சுருக்கம் (வெவ்வேறு பயிற்சி வகைப்படுத்தல்களின் கீழ்)

2018		இணைக்கப் பட்டமை		பயிற்சி இடைவிலகல்		பயிற்சி பூர்த்தி செய்தமை		பயிற்சியில் தொடர்ந்து இருக்கும் அளவு	
		2017	2018	2017	2018	2017	2018	2017	2018
நிலைய அடிப்படையிலான பயிலுநர் பயிற்சி	மாவட்ட பயிற்சி நிலையங்கள் முழு நேரம் - வேறு	1411	1511	217	461	944	1185	1207	1072
	மாவட்ட பயிற்சி நிலையங்கள் முழு நேரம் - தேசிய தொழிற் தகைமைகள் (NVQ)	4005	4128	597	774	2997	3390	3576	3540
	மாவட்ட பயிற்சி நிலையங்கள் பகுதி நேரம்	820	799	-	14	417	917	573	440
தேசிய நிறுவனம்	முழு நேரம்	1137	1688	327	231	691	1095	3388	3750
	பகுதி நேரம்	873	769	25	31	479	641	503	600
கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சி	கைத்தொழில் நிபுணர்	6223	4617	2525	3377	3824	2976	8488	6752
	தேசிய தொழிற் தகைமைகள் (NVQ)	15205	17886	3212	3706	11201	10582	7974	11572
	சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டவை	2368	1362	855	616	2052	1583	1704	867
	கிராமிய மட்டம்	676	418	141	104	397	622	569	261
உப மொத்தம்		32718	33178	7899	9314	23002	22992	27982	28854
வேறு	விசேட கைத்தொழில் பயிற்சி	9573	8994	701	245	10442	7119	4419	6049
	வெளிக்களப் பயிற்சி	8052	8749	826	982	8166	7807	3450	3410
மொத்தம்		50343	50921	9426	10541	41610	37918	35851	38313

*** பயிற்சி இடைவிலகல் மற்றும் பயிற்சி பூர்த்தி செய்தமையில் கடந்த வருடம் இணைக்கப்பட்ட பயிலுநர்களும் உள்ளடங்குகின்றனர்.

ஒட்டுமொத்தமாக 2018ஆம் ஆண்டினை எடுத்து நோக்கும் பொழுது 50,921 பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்து முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும் போது 1% வளர்ச்சியைக் காட்டுகின்றது (அட்டவணை 01). நிலைய அடிப்படையிலான பயிலுநர் பயிற்சியுடன் ஒப்பிடுகையில் கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சிக்கு அதிக நாட்டம் உள்ளமை இவ் வருடத்தினுள் குறிப்பிடத்தக்க அம்சமாகும். தொழிற் பயிற்சித் துறையில் கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சியினை மேற்கொள்கின்ற ஒரே ஒரு நிறுவனமாக எமது நிறுவனம் அமைந்து இருப்பதே இதற்குக் காரணமாக அமைகின்றது.


2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது தேசிய தொழிற் தகைமைகள் (NVQ) இற்காக பயிலுநர்களின் அதிக நாட்டத்தைக் காணக் கூடியதாக உள்ளது. தேசிய தொழிற் தகைமைகள் (NVQ) இற்காக ஆட்சேர்ப்பு செய்தல் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும் போது 16% வளர்ச்சியைக் காட்டுகின்றது.

முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும் போது பயிற்சியிலிருந்து இடைவிலகிச் செல்லல் 10% வளர்ச்சியைக் காட்டுகின்றது. (விசேட கைத்தொழில் பயிற்சி மற்றும் வெளிக்களப் பயிற்சி தவிர்த்து)

நிலைய அடிப்படையிலான பயிலுநர் பயிற்சியில் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும் போது பயிற்சியிலிருந்து இடைவிலகிச் செல்லல் 52% வளர்ச்சியைக் காட்டுவதுடன், தேசிய நிறுவனத்தினுள் பயிற்சியிலிருந்து இடைவிலகிச் செல்லல் ஓரளவிற்குக் குறைந்துள்ளது. இதற்கான பிரதான காரணம் பயிற்சி நிலையங்களில் காணப்படும் வசதிகள் போதாமை மற்றும் நிலையங்களில் காணப்படும் சுகாதார வசதிகள் போதாமை மற்றும் அவை முறையாகப் பராமரிக்கப்படாமை போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சியில் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும் போது பயிற்சியிலிருந்து இடைவிலகிச் செல்லல் 16% வளர்ச்சியைக் காட்டுகின்றது.


வரைபு 01 பயிற்சி அளிக்கும் செயற்பாடுகளின் சுருக்கம் (14 ஆண்டுகளினுள்)



பயிலுநர் ஆட்சேர்ப்பு, பயிலுநர் பயிற்சியிலிருந்து இடைவிலகிச் செல்லல் மற்றும் பயிலுநர் பயிற்சியைப் பூரணப்படுத்தல்களுக்கான கடந்த 14 வருடங்களுக்கான ஒப்பீடு இதன் மூலம் செய்யப்படுகின்றது.

பயிலுநர் ஆட்சேர்ப்பு நேர்மறையான போக்கினைக் காட்டுகின்றது. பயிலுநர் பயிற்சியிலிருந்து இடைவிலகிச் செல்லல் சாதாரண மட்டத்தில் காட்டப்படுகின்றது. பயிலுநர் பயிற்சியைப் பூரணப்படுத்துவதும் நேர்மறையான போக்கினைக் காட்டுகின்றது.

வரைபு 02 பல்வேறு பயிற்சி வகைப்படுத்தல்களுக்கு அமைய பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு



மதிப்பிடப்படும் வருடத்தில் பல்வேறு பயிற்சி வகைப்படுத்தல்களின் கீழ் பயிலுநர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் மேற்குறிப்பிட்ட வரைபு 02 இன் மூலம் காட்டப்படுகின்றது. கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சிக்காக பயிலுநர்களின் அதிக நாட்டம் காணப்படுவது இவ் வரைபடம் மூலம் நன்கு வெளிப்படுகின்றது.

அட்டவணை 02 - வெவ்வேறு பயிற்சி வகைப்படுத்தல்களின் கீழ் பயிற்சி வழங்கும் நடவடிக்கைகளின் சுருக்கம் (ஆண், பெண் அடிப்படையில்)


2018			இணைக்கப் பட்டமை			பயிற்சி இடைவிலகல்			பயிற்சி பூர்த்தி செய்தமை			பயிற்சியில் தொடர்ந்து இருக்கும் அளவு		
			ஆண்	*பெண்*	*மொத்தம்*	*ஆண்*	*பெண்*	*மொத்தம்*	*ஆண்*	*பெண்*	*மொத்தம்*	*ஆண்*	*பெண்*	*மொத்தம்*
நிலைய அடிப்படையிலான பயிலுநர் பயிற்சி	மாவட்ட பயிற்சி நிலையங்கள் முழு நேரம்	தேசிய தொழிற் தகைமைகள் அற்ற	438	1073	1511	133	328	461	276	909	1185	307	765	1072
		தேசிய தொழிற் தகைமைகள் (NVQ)	1593	253:	4128	316	458	774	1378	2012	3390	1208	2332	3540
	மாவட்ட பயிற்சி நிலையங்கள் பகுதி நேரம்		203	596	799	3	11	14	234	684	918	101	339	440
தேசிய நிறுவனம்	முழு நேரம்		1405	283	1688	198	33	231	936	159	1095	3148	602	3750
	பகுதி நேரம்		707	62	769	31	-	31	617	24	641	557	43	600
கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சி	கைத்தொழில் நிபுணர்		2848	1769	4617	2712	665	3377	1551	1425	2976	5045	1707	6452
	தேசிய தொழிற் தகைமைகள் (NVQ)		12722	5164	17886	2491	1215	3706	8394	2188	10582	7045	4527	11572
	சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டவை		835	527	1362	325	291	616	878	705	1583	539	328	867
	கிராமிய மட்டம்		147	271	418	33	71	104	183	439	622	104	157	261
உப மொத்தம்			**20898**	**12280**	**33178**	**6242**	**3072**	**9314**	**14447**	**8545**	**22992**	**18054**	**10800**	**28854**
வேறு	விசேட கைத்தொழில் பயிற்சி		5436	3558	8994	148	97	245	4325	2794	7119	3706	2343	6049
	வெளிக்களப் பயிற்சி		3848	4901	8749	432	550	982	3074	4733	7807	1279	2131	3410
மொத்தம்			**30182**	**20739**	**50921**	**6822**	**3719**	**10541**	**21846**	**16072**	**37918**	**23039**	**15274**	**38313**

*** பயிற்சி இடைவிலகல் மற்றும் பயிற்சி பூர்த்தி செய்தமையில் கடந்த வருடம் இணைக்கப்பட்ட பயிலுநர்களும் உள்ளடங்குகின்றனர்.

மேற்குறித்த அட்டவணை 02 இன் மூலம் பல்வேறு பயிற்சி வகைப்படுத்தல்களின் கீழ் பயிற்சி வழங்கும் நடவடிக்கைகளின் சுருக்கம் ஆண், பெண் வேறுபாட்டிற்கு அமைய காட்டப்படுகின்றது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது இது ஆண்கள் கற்கை நெறிகளுக்காக அதிக நாட்டத்தைக் காட்டுகின்றமையை வெளிப்படுத்துகின்றது.

நிலைய அடிப்படையிலான பயிலுநர் பயிற்சியினைக் கருதும் போது பெண்கள் அதிக வீதம் நாட்டத்தைக் காட்டுகின்றமையை வெளிப்படுத்துகின்றது. ஏனெனில் நிலைய அடிப்படையிலான பயிலுநர் பயிற்சிச் சூழல் பெண்களுக்கு சாதகமானது என்பதனாலாகும். கைத்தொழில் அடிப்படையிலான பயிலுநர் பயிற்சி மற்றும் தேசிய நிறுவன பயிலுநர் பயிற்சியினைக் கருதும் போது ஆண்கள் அதிக வீதம் நாட்டத்தைக் காட்டுகின்றமையை வெளிப்படுத்துகின்றது. ஏனெனில் அப் பயிற்சிக் கற்கை நெறிகளில் அதிகமானவை தொழில்நுட்பப் பயிற்சி நெறிகள் என்பதனாலாகும்.

வரைபு 03 ஆண், பெண் வேறுபாட்டிற்கு அமைய பயிற்சிக்காக ஆட்சேர்ப்பு செய்தல் (விசேட கைத்தொழில் பயிற்சி மற்றும் வெளிக்களப் பயிற்சி தவிர்த்து)



மதிப்பீடு செய்யப்பட்ட ஆண்டில் பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்ட பயிலுநர்களில் 63% ஆண்களும் 37% பெண்களும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். (வரைபு 03)


அட்டவணை 03 - பயிற்சி அளிக்கும் சுருக்கம் (மாவட்ட மற்றும் ஏனைய பயிற்சி வகைப்படுத்தல்களின் கீழ்)

மாவட்டம்		இலக்கு	இணைக்கப் பட்டமை			பயிற்சி இடைவிலகல்			பயிற்சி பூர்த்தி செய்தமை			பயிற்சியில் தொடரும் அளவு		
			ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
கொழும்பு		3096	2174	1660	3834	822	340	1162	1582	1316	2898	2411	1459	3870
கம்பஹா		1286	906	340	1246	363	85	448	445	249	694	997	350	1347
களுத்துறை		1284	502	556	1058	348	158	506	280	304	584	425	439	864
கண்டி		1543	564	424	988	220	151	371	305	321	626	506	381	887
மாத்தளை		669	336	196	532	115	79	194	273	137	410	213	170	383
நுவரெலியா		936	270	482	752	92	107	199	204	486	690	190	347	537
காலி		1432	934	729	1663	459	165	624	570	389	959	819	675	1494
மாத்தறை		1565	714	697	1411	263	211	474	422	523	945	607	596	1203
ஹம்பாந்தோட்டை		940	1353	476	1829	169	157	326	1083	359	1442	347	408	755
யாழ்ப்பாணம்		1081	579	461	1040	156	120	276	531	271	802	615	592	1207
மன்னார்		440	407	201	608	96	18	114	345	256	601	352	192	544
வவுனியா		670	800	395	1195	107	65	172	596	352	948	295	208	503
முல்லைத்தீவு		298	553	298	851	77	29	106	474	150	624	214	222	436
கிளிநொச்சி		778	358	217	575	92	18	110	330	302	632	359	149	508
மட்டக்களப்பு		1063	1079	301	1380	708	30	738	672	168	840	1429	287	1716
அம்பாறை		911	981	378	1359	340	94	434	516	214	730	800	252	1052
திருகோணமலை		992	866	488	1354	164	65	229	619	270	889	772	453	1225
குருநாகல்		1346	1002	570	1572	257	178	435	592	398	990	546	477	1023
புத்தளம்		720	423	414	837	78	104	182	289	289	578	295	333	628
அனுராதபுரம்		741	998	382	1380	235	101	336	708	260	968	411	322	733
பொலன்னறுவை		1071	1039	249	1288	175	128	303	871	149	1020	421	165	586
பதுளை		959	384	502	886	208	203	411	213	296	509	242	428	670
மொனராகலை		692	437	299	736	143	133	276	333	159	492	208	235	443
இரத்தினபுரி		1154	592	717	1309	177	184	361	387	406	793	481	615	1096
கேகாலை		987	535	503	1038	149	116	265	270	352	622	394	400	794
உப மொத்தம்		**26654**	**18786**	**11935**	**30721**	**6013**	**3039**	**9052**	**12910**	**8376**	**21286**	**14349**	**10155**	**24504**
தேசிய நிறுவனம்	முழு நேரம்	1783	1405	283	1688	198	33	231	936	159	1095	3148	602	3750
	பகுதி நேரம்	1118	707	62	769	31	-	31	617	24	641	557	43	600
மொத்தம்		**29555**	**20898**	**12280**	**33178**	**6242**	**3072**	**9314**	**14463**	**8559**	**23022**	**18054**	**10800**	**28854**
விசேட கைத்தொழில் பயிற்சி		9775	5436	3558	8994	148	97	245	4325	2794	7119	3706	2343	6049
வெளிக்களப் பயிற்சி		11000	3848	4901	8749	432	550	982	3074	4733	7807	1279	2131	3410
முழு மொத்தம்		**50330**	**30182**	**20739**	**50921**	**6822**	**3719**	**10541**	**21862**	**16086**	**37948**	**23039**	**15274**	**38313**

*** பயிற்சி இடைவிலகல் மற்றும் பயிற்சி பூர்த்தி செய்தமையில் கடந்த வருடம் இணைக்கப்பட்ட பயிலுநர்களும் உள்ளடங்குகின்றனர்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது அதிக எண்ணிக்கையான பயிலுநர்களை இணைத்துக் கொண்டு கொழும்பு மாவட்டம் முன்னணி வகிப்பதுடன் குறைந்த பயிலுநர்களை இணைத்துக் கொண்ட மாவட்டமாக மாத்தளை அமைகின்றது.

வரைபு 04 தேசிய பயிலுநர் பயிற்சி (பகுதி நேர பயிலுநர் பயிற்சி தவிர்த்து)



2018ஆம் ஆண்டைக் கருதும் போது தேசிய தொழிற் தகைமைகள் மற்றும் ஏனைய பயிற்சியளித்தலின் கீழ் பயிலுநர்களை இணைத்துக் கொண்டமை வரைபு 04 இன் மூலம் காட்டப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது தேசிய தொழிற் தகைமைகளுக்காக அதிக ஈடுபாடு காட்டுவதை மேற்குறித்த வரைபடம் வெளிப்படுத்துகின்றது. தேசிய நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படும் சகல பாடநெறிகளும் தேசிய தொழிற் தகைமைப் பாடநெறிகளாகும்.

அட்டவணை 04 - நிலைய அடிப்படையிலான இரட்டைப் பயிற்சி - முழு நேரம் - மாவட்ட மட்டம் (தேசிய நிறுவனத்தைத் தவிர)

மாவட்டம்	இணைக்கப் பட்டமை			பயிற்சி இடைவிலகல்			பயிற்சி பூர்த்தி செய்தமை			பயிற்சியில் தொடரும் அளவு		
	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
கொழும்பு	205	509	714	91	100	191	172	448	620	241	450	691
கம்பஹா	4	73	77	2	15	17	8	62	70	5	104	109
களுத்துறை	63	162	225	26	32	58	36	114	150	63	151	214
கண்டி	97	159	256	22	18	40	81	105	186	91	147	238
மாத்தளை	19	90	109	3	28	31	14	82	96	19	78	97
நுவரெலியா	35	374	409	26	75	101	44	328	372	34	257	291
காலி	80	131	211	59	10	69	86	93	179	79	127	206
மாத்தறை	147	136	283	2	32	34	151	119	270	51	127	178
ஹம்பாந்தோட்டை	100	132	232	31	37	68	60	91	151	57	104	161
யாழ்ப்பாணம்	40	85	125	4	7	11	33	65	98	38	80	118
மன்னார்	-	90	90	-	11	11	-	139	139	-	82	82
வவுனியா	21	68	89	7	15	22	30	49	79	17	58	75
முல்லைத்தீவு	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
கிளிநொச்சி	91	47	138	11	13	24	92	67	159	126	65	171
மட்டக்களப்பு	23	18	41	4	3	7	19	27	46	20	15	35
அம்பாறை	47	185	232	17	35	52	9	140	149	30	74	104
திருகோணமலை	158	184	342	16	30	46	81	124	205	149	133	282
குருநாகல்	134	198	332	53	39	92	76	146	222	101	188	289
புத்தளம்	31	128	159	4	35	39	24	101	125	29	116	145
அனுராதபுரம்	24	140	164	4	32	36	14	118	132	21	128	149
பொலன்னறுவை	557	53	610	-	2	2	505	45	550	221	49	270
பதுளை	38	128	166	7	58	65	32	54	86	41	117	158
மொனராகலை	39	104	143	48	69	117	14	73	87	10	73	83
இரத்தினபுரி	22	177	199	4	66	70	18	132	150	20	170	190
கேகாலை	56	237	293	8	24	32	55	199	254	52	224	276
முழு மொத்தம்	**2031**	**3608**	**5639**	**449**	**786**	**1235**	**1654**	**2921**	**4575**	**1515**	**3097**	**4612**

*** பயிற்சி இடைவிலகல் மற்றும் பயிற்சி பூர்த்தி செய்தமையில் கடந்த வருடம் இணைக்கப்பட்ட பயிலுநர்களும் உள்ளடங்குகின்றனர்.

மதிப்பிடப்படும் வருடத்தில் நிலைய அடிப்படையிலான இரட்டைப் பயிற்சி – முழு நேரப் பயிற்சி நெறிக்கான பயிலுநர்களை இணைத்துக் கொண்டமைக்கான சுருக்கம் மேற்குறித்த அட்டவணை 04 இன் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. மாவட்ட மட்ட நிலையங்கள் அடிப்படையிலான இரட்டைப் பயிற்சியைக் கருதும் போது அதிக எண்ணிக்கையானோரை பயிற்சியில் தக்க வைத்துக் கொண்டு கொழும்பு மாவட்டம் முன்னணி வகிக்கின்றது. இந்த வருடத்தினுள் முல்லைத்தீவு மாவட்டத்தில் அத்தகைய பயிற்சி நிலையமொன்று செயற்படவில்லை.

குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகள் பக்கம் 07 இருந்து 14 வரையான படிவங்கள் நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாக உள்ளடங்கியுள்ளன.

சான்றுப்படுத்தல்

31.12.2018 ஆண்டு நிதியறிக்கையானது உண்மையும் நியாயமானதுமென சான்றுப்படுத்துகிறோம்.

.....	.....	.....
கே.ஏ.டீ தமரா ரம்யலதா	**நசீர் அஹமட் (Eng)**	**யு.எம். பிரபோசினி**
கணக்கு அலுவலர்	**தலைவர் / CEO**	**உதவி பணிப்பாளர்- நிதி மற்றும் கட்டுப்பாடு**

இந் நிதிக் கூற்றுக்களை தயார்படுத்தல் மற்றும் முன்வைத்தலுக்கான பொறுப்பு முகாமைத்துவ சபையை சார்ந்தது.

இந் நிதிக் கூற்றுக்கள் முகாமைத்துவ சபையினால் அனுமதியளிக்கப்பட்டு அவர்களின் சார்பில் கையொப்பமிடப்பட்டுள்ளது.

.....	.....
பணிப்பாளர் - பணிப்பாளர் குழு	**பணிப்பாளர் - பணிப்பாளர் குழு**

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
31.12.2018 இல் முடிந்த நிதியாண்டிற்கான செயற்பாட்டு நிதியறிக்கை

முடிவுற்ற வருடத்திற்கானது		31.12.2018	31.12.2017
விபரம்	**குறிப்பு**	**ரூபா**	**ரூபா**
நடைமுறை வருமானம்			
மீள் அரச மானியம்		1,175,060,000.00	904,645,000.00
புணரமைப்பிற்கான அரச மானியம்		15,508,938.42	11,307,195.02
சுய உற்பத்தி வருமானம்	11a	(31,681,454.63)	14,285,491.43
மாறுபட்ட வருமான மாற்றம்	13	101,120,861.86	89,419,133.58
ஏனைய வருமானம்			
திறன் துறை அபிவிருத்தி திட்டம்		89,220,153.36	78,083,202.94
ஏனைய உதவி	14	36,292,796.69	13,570,489.55
அவுஸ்திரேலியா திட்டம்		4,624,950.00	
CEB மற்றும் NAITA கூட்டுத்திட்டம்		8,970,277.00	
ஏனைய வருமானம்	15	61,824,449.06	60,476,913.53
முழு வருமானம்		**1,460,940,971.76**	**1,171,787,426.05**
நடைமுறை செலவீனங்கள்			
பயிற்சி பொருட்கள்	16	22,204,257.82	16,918,529.17
ஏனைய பயிற்சி செலவுகள்	17	218,985,857.71	187,743,531.91
உத்தியோகஸ்தர்களின் தனிப்பட்ட ஊதியம்	18	717,152,571.58	656,944,973.00
உத்தியோகஸ்தர்களின் ஏனைய செலவுகள்	19	21,395,464.01	58,268,125.19
போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்	20	87,903,661.26	67,098,741.90
வழங்கல்களும் அலுவலக தேவைகளும்	21	45,364,037.79	27,311,194.71
உபகரண பராமரிப்பு	22	11,290,870.25	13,075,316.09
வளாக பராமரிப்பு	23	181,343,941.59	153,400,307.42
நிதி மற்றும் ஏனைய செலவுகள்	24	4,514,455.19	4,758,212.55
தேய்மானம்	25	133,318,578.63	128,772,709.34
கணக்காய்வு கொடுப்பனவு		584,004.61	552,680.19
மொத்த நடைமுறை செலவீனங்கள்		**1,444,057,700.44**	**1,314,844,321.47**
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து மிகை (பற்றாக்குறை)		**16,887,271.32**	**(143,056,895.42)**
கணக்கிடப்பட்ட மிகை / பற்றாக்குறையின் அறிக்கைகள்			
நயிட்டா நிதியம்			
ஜனவரி மாத 01 இல் முன்பே பதிவுசெய்யப்பட்டது		(870,562,966.04)	
முற்றிலும் கணக்கிடப்பட்ட மிகை / (பற்றாக்குறை) Tally மூலம்		(240,823.10)	
முன்னைய வருட சீராக்கல்		(16,785,577.22)	
முன்னைய வருட சீராக்கல் (நடப்பாண்டில்)		6,344,494.30	
நயிட்டா நிதிய ஆரம்ப நிலுவையில் முன்னைய வருட சீராக்கல்		287,328.99	
பகுதி நேரம்			
ஜனவரி மாத 01 இல் முன்பே பதிவுசெய்யப்பட்ட பகுதி நேரம்		71,582,600.30	
முன்னைய வருட சீராக்கல்		45,763.16	
நடப்பாண்டில் சீராக்கல்		(252,991.52)	
ஜனவரி மாத 01 இல் மீண்டும் தொடங்கப்பட்ட போது		(809,582,171.13)	(727,506,070.62)
தேறிய மிகை / பற்றாக்குறை நடப்பாண்டில்		16,887,271.32	(143,056,895.42)
ஜனவரி மாத 01 இல் தேறிய மிகை / பற்றாக்குறை		**(792,694,899.81)**	**(870,562,966.04)**

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

திரட்டிய காசுப்பாய்ச்சல் கூற்று

ஆண்டு இறுதியின் போது	31.12.2016		31.12.2015	
	ரூபா		ரூபா	
செயல்பாட்டு நடவடிக்கைகள்				
ஆண்டிற்கான நிகர மிகை (பற்றாக்குறை)		16,887,271.29		(143,056,895.42)
சீராக்கல்கள்				
பெறுமானத் தேய்வு	133,589,815.05		129,228,543.34	
வருமான வேறுப்பாடு	(101,120,861.86)		(4,501,717.49)	
இல்லாதொழிக்கப்பட்ட சொத்துக்களினால் ஏற்பட்ட நட்டம்	219.89		–	
AETI PU/PTC and ATI PU/PTC ஏற்பட்ட நட்டம்	16,069.82		–	
நயிட்டா கணக்கில் முன்னைய வருட சீராக்கலால் வருமானம்	(1,201,220.99)		–	
ATI & HO முன்னைய வருட சீராக்கல் (பகுதி நேரம்)	207,228.36		–	
பணிக்கொடைக்கான நிதி ஒதுக்கம்	3,049,641.80		45,730,977.00	
பணிக்கொடைக்கான கொடுப்பணவு	(13,774,173.80)		(19,998,091.50)	
கையிருப்பில் மிகை / குறை	(2,534,183.91)		1,574,703.74	
வருமானத்தில் மிகை / குறை	(15,124,143.89)		11,042,490.42	
வைப்பீடு முன்செலுத்துகை மற்றும் முன்பணம் மிகை / குறை	(29,969,420.26)		5,051,840.97	
குறகிய கால வைப்பீடு மிகை / குறை	36,381,405.19		–	
கொடுப்பனவுகள் மிகை / குறை	5,367,615.52		60,072,392.88	
சேர்ந்த செலவுகளில் மிகை / குறை	4,548,134.57		16,010,840.84	
தேய்மான சீராக்கல்	–		109,324.97	
வருமான அறிக்கைக்கு மாற்றப்பட்ட	–		(89,419,133.58)	
அரசு மானியம் மாற்றப்பட்டது	–		(11,307,195.02)	
தொங்கல் கணக்கு		19,436,125.49	(3,072,105.20)	138,952,906.10
நடைமுறையில் தேறிய காசுப்பாய்ச்சல்		36,323,396.78		(4,103,989.32)
முதலீட்டு நடவடிக்கைகள்				
ஆலை மற்றும் உபகரண கொள்வனவு	(147,376,559.00)		(121,150,476.42)	
மூலதன முன்னேற்றத்தில் வேலை	(38,041,665.85)		(11,710,672.16)	
நிலையான சொத்துக்களின் விற்பனை முன்னெடுப்பு	4,146.25		2,800.00	
நிலையான சொத்துக்கள் சேர்ப்பின் படிமுறைகள்			(303,855.38)	
முதலீட்டு நடவடிக்கைகளில் தேறிய காசுப்பாய்ச்சல்		(185,414,078.60)		(133,162,203.96)
நிதி நடவடிக்கைகள்				
அரசாங்கத்தின் மூலதன கொடை	126,777,061.58		78,800,000.00	
மூலதனம் SSDP	30,890,888.95			
பெற்றுக்கொண்ட உதவிகள்	24,657,364.19			
IETI எல்லை சுவர் நிதி	(2,198,176.30)			
நிதி நடவடிக்கைகளில் தேறிய காசுப்பாய்ச்சல்		180,127,138.42		78,800,000.00
பணம் மற்றும் பணத்திற்கு இணையானவைகளின் நிகர அதிகரிப்பு		31,036,456.60		(58,466,193.28)
கால ஆரம்பத்தில் பணம் மற்றும் பணத்திற்கு இணையானவைகள்		37,634,736.82		209,104,488.86
கால முடிவில் பணம் மற்றும் பணத்திற்கு இணையானவைகள்		**68,671,193.42**		**150,638,295.58**

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
31.12.2018 பங்கு மாற்றங்களின் கூற்று

விபரம்	திரட்டிய நிதி	அரச மூலதன மானியம்	எஸ்எஸ்டிபி நிதி	வேறுபட்ட வருமான மானியம் (பொறுப்பு)	பெற்ற உதவிகள்	பகுதி நேர கணக்கினால் இலாபம்	நூலக நிதியம்	மோட்டார் சுழற்சி நிதியம்	ஐயிஐஓ எல்லை சுவர் நிதியம்	பகுதி நேர நிதி ஒதுக்கீடு	பகுதி நேர நிதி ஒதுக்கீடு (பொறுப்பு)	புதுமெதுர நிதியம்	எம்.வை.ஏ.எஸ்.டீ நிதியம	மொத்தம்
31 டிசம்பர் 2017 நிலவரப்படி இருப்பு	(870,275,637.05)	0.00		1,095,807,919.84	717,117,964.73	71,582,600.30	93,730.75	7,415,059.28	2,306,218.20	11,148,914.78	5,902,130.56	719,866.84	63,800,000.00	1,105,618,768.23
நபிட்டா மூலதனமானிய கணக்கிலிருந்து முதல் மானிய ஆரம்ப மீதிக்கு மாற்றப்பட்ட தொகை	(81,592,773.05)	56,180,987.46	25,411,785.59											0.00
புதுமெதுர மற்றும் எம்.வை.டி.எஸ் மானியம்	64,519,866.84											(719,866.84)	(63,800,000.00)	0.00
டெலி மூலம் சேர்ந்த இலாபம்	(240,823.10)													(240,823.10)
1 ஜனவரி 2018 இல் மீதி	**(887,589,366.36)**	**56,180,987.46**	**25,411,785.59**	**1,095,807,919.84**	**717,117,964.73**	**71,582,600.30**	**93,730.75**	**7,415,059.28**	**2,306,218.20**	**11,148,914.78**	**5,902,130.56**	**0.00**	**0.00**	**1,105,377,945.13**
முன்னை வருட சீராக்கல்	287,328.99					45,763.16								333,092.15
பொறுப்பு கணக்கிற்கு மாற்றப்பட்ட நூலக நிதி							(93,730.75)							(93,730.75)
மீளக்குறிப்பிடப்பட்ட ஆரம்ப மீதி	**(887,302,037.37)**	**56,180,987.46**	**25,411,785.59**	**1,095,807,919.84**	**717,117,964.73**	**71,628,363.46**		**7,415,059.28**	**2,306,218.20**	**11,148,914.78**	**5,902,130.56**	_	_	**1,105,617,306.53**
ஆண்டுக்கு பெறப்பட்ட முதல் மானியம் ஜீ.ஓ.எஸ்.எல்		142,286,000.00	30,890,888.95											173,176,888.95
புனரமைப்பு முதல்		(15,508,938.42)												(15,508,938.42)
ஆண்டின் லாபம்	48,568,725.95					(31,681,454.63)								16,887,271.32
ஆண்டிற்கான சரிபடுத்தல்	6,344,494.30					(252,991.52)								6,091,502.78
பகுதி நேரத்திலிருந்து பெறப்பட்ட உதவி					24,657,364.19									24,657,364.19
வேறுப்பட்ட பொறுப்புகளுக்கு மாற்றப்பட்டது		(111,708,607.38)	(10,657,256.60)	147,023,228.17	(24,657,364.19)									0.00
வேறுப்பட்ட வருமானத்திற்கு மாற்றப்பட்டது				(101,120,861.86)										(101,120,861.86)
எல்லை சுவர் நிதியம் ஏ.டி.ஐ.									(2,293,247.22)					(2,293,247.22)
எல்லை சுவர் நிதியின் மீதி ஏ.ஐ.ஐ									(12,970.98)					(12,970.98)
ஏ.ஐ.ஐ எல்லை சுவர் நிதியின் மீதி மற்ற கடன் வழங்குநர்களுக்கு மாற்றப்பட்டவை														
31 டிசம்பர் 2018 இல் மீதி	**(832,388,817.12)**	**71,249,441.66**	**45,645,417.94**	**1,141,710,286.15**	**717,117,964.73**	**39,693,917.31**	**0.00**	**7,415,059.28**	**(0.00)**	**11,148,914.78**	**5,902,130.56**	**0.00**	**0.00**	**1,207,494,315.29**

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

பொது கணக்கீட்டு கொள்கைகள்

1. உட்பொருளை அறிக்கைப்படுத்தல்.

(இதன் பின்னர் "அதிகாரசபை" எனப்படும்) அது 1990ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தினால் தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை உருவாக்கப்பட்டது. இது இல.971, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை, வெலிக்கடை, ராஜகிரிய எனும் முகவரியில் அமைந்துள்ளதுள்ளது.

2. அடிப்படை தயார்ப்படுத்தல்

நிறுவனத்தின் நிதிக் கூற்றானது பொதுத் துறை கணக்கு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது நல்லாட்சி வடிவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந் நிதிக் கூற்றானது இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

3. ஒப்பீட்டு தகவல்

3.1 நிகழ்வுக்குரிய வருடத்தின் சமர்பிப்புகளுடன் இணங்குதல் அவசியமானவிடத்து முன்னைய வருடத்தின் எண்களும் சொற்தொடர்களும் மீளாக்கம் செய்யப்பட்டன

4. அரசாங்க மானியங்களும் உதவுத் தொகைகளும்

4.1 இவ்வமைப்பு தனது செலவினங்களுக்கு தங்கியுள்ள அரசாங்க மானியங்கள் பெறுவனவுகள் அடிப்படையில் கணக்கீடாக்கப்பட்டுள்ளன. மீள்நிகழ் செலவினம் தொடர்பான மானியங்கள், வருமான செலவின கணக்கில் வரவாக முன்வைக்கப்பட்டுள்ளவிடத்து, மூலதன செலவினம் தொடர்பான மானியம் நேரடியாக தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி நிதியத்தில் வரவாக்கப்பட்டது.

4.2 "ஆதனங்களின் மாறல் வடிவத்திலிருந்த அரசாங்க மானியங்கள் பிற்போடப்பட்ட வருமானமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, ஆதனத்தின் பயன்பாட்டு வாழ்வுக்காலம் முழுவதுக்குமான முறையான அடிப்படையிலான வருமானமாக அங்கீகரிக்கப்பட்டது."

5. ஆதனங்களும் பெறுமானங்களின் அடிப்படையும்

5.1 கையிருப்புகள்

பொதுவாக கையிருப்புகள் ஆகு செலவில் பெறுமானமாக்கப்பட்டு, அச்சிடப்பட்ட பொருட்களின் வழக்கொழிந்த கையிருப்புக்கு 5% பொறுப்பொதுக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

5.2 பெற வேண்டியவைகள்

தேறுமென எதிர்பார்க்கப்படும் தொகையில் பெறவேண்டியவைகள் கூறப்பட்டு, 31.12.2017ல் அதிகார சபையின் சேவையில் மற்றும் திறன்கள் துறை அபிவிருத்தி திட்டத்தில் இல்லாத பதவியினரின் அறவிட முடியாத மற்றும் ஐயக்கடன்களுக்கு 100மூ பொறுப்பொதுக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

5.3 சொத்துக்கள் பொறித்தொகுதி உபகரணங்கள்

(ய). சுநஉழபவைழைழெ யனெ ஆநயளரசநஅநவெ

சொத்து உறுப்படிகள் பொறித்தொகுதிகள் உபகரணங்கள் ஆகியன தேய்மானத்தை அல்லாது பழுது கூட்டத்தை கழித்து ஆகுசெலவில் கூறப்பட்டுள்ளன.

(ஆ). ஆகு செலவு

சொத்துக்கள் பொறித்தொகுதிகள் உபகரணங்கள் ஆகியவற்றின் ஆகுசெலவு, கொள்வனவு விலையையும் அவற்றின் உத்தேச உபயோகத்திற்கு தொழிற்படும் நிலைக்கு கொண்டுவரும் யாதேனும் நேரடி சுமத்தலுக்குரிய ஆகுசெலவையும் உள்ளடக்கப்படுகிறது.

அதிகார சபையின் நிறைவேற்றங்களை மேற்கொள்வதற்கு அல்லது அதிகரிப்பதற்கு நிரந்தர தண்மையான சொத்துக்களை கொள்ளல் மேம்படுத்தல் விரிவாக்குதல் ஆகியவற்றுக்கு செலவிட்ட பின்தொடர் செலவினங்கள் மூலதன செலவினங்களாக கொள்ளப்பட்டன.

(இ). குறுகிய வாழ்வுள்ள பட்டியற் பொருட்கள்

குறுகிய வாழ்தகவுடையதும் மூலதனமாக்க முடியாததுமான பட்டியற் பொருட் உருப்படிகள் தற்பொழுது வருமான செலவீனங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் இவ்விடயங்களிள் கட்டுப்பாடு கருதி பொருட்பட்டியலாக்கப்பட்டு, பௌதீக கட்டுப்பாடு ஆக்கப்பட்டுள்ளது.

(ஈ). தேய்மானம்

சொத்தின் பயன்பாட்டு வாழ்வு மீது நேர் கோட்டு அடிப்படையில் தேய்மானம் கணக்கீடாக்கப்பட்டுள்ளது.

தேய்மான வீதம்

குத்தகையுடனான காணி	**குத்தகை காலத்திற்கு**
கட்டிடங்கள்	5%
பொறிகளும் உபகரணங்களும்	10%
தளபாடங்கள் மற்றும்	10%
கணினி மற்றும் துணைக்கருவிகள்	20%
நூலக புத்தகங்கள்	10%
மோட்டார் வாகனங்கள்	25%

5.4 காசு மற்றும் காசுக்கு இணையானவைகள்

கைவசமுள்ள காசு, வங்கியிலான கோரிக்கை வைப்புகள் உடனடியாக தெரியும் காசுத்தொகையாக மாற்றக்கூடிய குறுந்தவணை உயர் திரவவாக்க முதலீடுகள் ஆகியன, காசும் காசுசமனீடுகளும் வரையறுக்கப்பட்டுள்ளன.

காசுப்பாய்வு கூற்று நிமித்தம் கைவசமும் வங்கியிலும் உள்ள காசு, குறுந்தவணை முதலீடுகள், சங்கிரமத்திலான காசு மற்றும் காசு சமனீடுகளாக கருதப்பட்டுள்ளன.

6. கடன் பொறுப்புகளும் பொறுப்பொதுக்கங்களும்

'"கோரியவிடத்து கொடுப்பனவாகுவதற்கானதும் ஐந்தொகை திகதியிலிருந்து ஒருவருடத்திற்குள்ளாகும் கடனாகுபவை, ஐந்தொகையில் நடப்பு கடன் பொறுப்புகளாக பாகுபடுத்தப்பட்டுள்ளன. ஐந்தொகைத் திகதிக்குப் பின் ஒரு வருடம் அல்லது அதற்கு மேலாக கொடுப்பனவாக்கப்படவிருப்பவை நடப்பல்லாக்கடன் பொறுப்புக்களாகும்"

6.1 பணிக்கொடை ஏற்பாடு

எல்லா பணியாளர்களுக்கும் ஆரம்ப வருடத்திலிருந்து கொடுப்பனவாக்கப்படும் பணிக்கொடைக்கு பொறுப்பொதுக்கம் ஆக்கப்பட்டது. எனினும், 1983ன் 12ம் இலக்க பணிக்கொடைச் சட்டம் மற்றும் இல.நிரு.சேவை-16 ஆகியவற்றின் பிரகாரம் பணியாளர்க்கான கடன்பொறுப்பு தொடர்ந்த சேவையின் ஐந்து வருட பூர்த்தியில் ஏற்படுகிறது.

6.2 குறித்துரைக்கப்பட்ட உதவுத்தொகை திட்டங்கள்

"இவ்வதிகார சபை பணியாளரின் மொத்த வேதனத்திலிருந்து 15% மற்றும் 3% க்கு குறையாத தொகையை முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் வழங்குகிறது."

7. வருமானம்

அரசாங்கத்திலிருந்து பெற்ற மானியம், மீளெழும் செலவினத்திற்கு பெற்ற உன்னாட்டு வெளிநாட்டு உதவிகள் மற்றும் அதிகாரசபையின் பலவித வருமானம் ஆகியவை வருமான செலவின கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மூலதன மானியத்திலிருந்து மூலதன ஆதனங்களின் பாரிய பழுது பார்ப்புக்கும் விருத்தியாக்கலுக்கும் செலவிடப்பட்டு ஆனால் மூலதனமாக்கப்படாத தொகை, இலாப நட்ட கணக்கில் சுமத்தப்பட்டு, இதற்கு சமமானத் தொகை, மானியப் பெறுகை பேரேட்டு (மூலதனம்) கணக்கிலிருந்து மாற்றப்பட்டது.

செலவினத்தை மேவிய வருமானத்தின் மிகை / பற்றாக்குறை, நிலையான ஆதனங்களின் அறியப்பட்ட பொறுப்புகளும் தேய்மானத்திற்கு பொறுப்பொதுக்கம் ஆக்கப்பட்ட பின்னர் அடையப்பட்டது.

அதிகாரசபையை இயக்குவதிலும் அதனது மூலதன ஆதனங்களை பராமரிப்பதிலுமான எல்லா செலவினமும் வருமானத்தில் சுமத்தப்பட்டுள்ளது.

8. மூலதன செயற்பாடுகளும் உறுமுரிமை கடன் பொறுப்பு

அனைத்து பொருள் மூலதன செயற்பாடுகளும் உறுமுரிமை கடன் பொறுப்புகளும் கவனங் கொள்ளப்பட்டு தேவையான சீராக்கல்களும் வெளிப்பாடுகளும் நிதிக் கூற்றில் ஆக்கப்பட்டுள்ளன.

9. ஐந்தொகைத் திகதிக்குப் பின்னான நிகழ்வுகள்

"ஐந்தொகை திகதிக்குப் பின் நிகழ்ந்த நிகழ்வுகளின் பொருட்தன்மை கவனத்தில் கொள்ளப்பட்டு உகந்த சீராக்கல்கள் தேவையானவிடத்து கணக்குகளில் ஆக்கப்பட்டுள்ளன"

10. மாறுபட்ட வருமான அதிகரிப்பு / குறைவு ஆனது நிதிப் பாய்ச்சல் கூற்றில் காசற்ற இயக்கமாக காட்டுகின்றது.

VTY/E/NAITA/01/18/20

தவிசாளர்
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டத்துடனான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை

---

1. நிதிக் கூற்றுகள்

1.1 மறுதலிப்பு அடிப்படை

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள. 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பில் 154(6) பிரிவு பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் மறுதலிப்பு அடிப்படைக்கான பகுதியில் கலந்துரையாடியுள்ள விடயங்களில் முக்கியத்துவம் காரணமாக அதிகார சபையின் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 மறுதலிப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) மீளாய்விற்கான ஆண்டில் குத்தகை காணிகளின் பொருட்டு ரூபா.452,458 ஐ கடன் தீர்ப்பாக கணக்கு வைக்கப்பட்டிருப்பினும், அந்த காணிகள் கடன் தீர்ப்பு செய்யும் கணக்கீட்டு கொள்கை நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொது துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இல் 47 ஆவது பந்தி பிரகாரம் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ஆகிய உருப்படிகள் ஒவ்வொரு 03 ஆண்டுகளுக்கு அல்லது 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மீள்கணிப்பீடு செய்தல் வேண்டுமாயினும், நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கியுள்ள செலவு ரூபா.3,406,430,802 ஐ சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் அதிகார சபையின் ஆரம்பத்திலிருந்து மீள்கணிப்பீடு செய்யவில்லை.

(இ) இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமம் 07 இல் 65 ஆவது பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களில் பயனுள்ள ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமை காரணமாக செலவு ரூபா. 118,901,800 ஆன மோட்டார் வாகனம் முற்றுமுழுதாக தேய்மானம் செய்திருப்பினும், மேலும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட குறைப்பாடு இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

(ஈ) 2006 ஆண்டு தொடக்கம் 2017 ஆண்டு வரையிலான காலப் பகுதிக்கு ஏற்புடையதாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திடம் செலுத்தப்பட வேண்டிய உதவு தொகை மற்றும் மிகை கட்டணமாக செலுத்தப்பட வேண்டிய மொத்தம் ரூபா.173,453,298 இற்காக இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமம் 08 இல் பந்தி 22 பிரகாரம் நிதிக் கூற்றுகளில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளவில்லை என்பதுடன், ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்திருந்த விரிவுரையாளர் ஒருவரை அகற்றுவதற்கு ஏற்புடையதாக செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா.3,875,000 ஆன நட்டஈடு தொடர்பில் 34 ஆவது பந்தி பிரகாரம் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

(உ) இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமம் 12 இன் படி குத்தகை சொத்துக்கள் நிதிக் கூற்றுகளில் இறையிலி சொத்துக்களிலிருந்து ஒதுக்கப்பட்டு காட்டப்படுதல் வேண்டுமாயினும், அதிகார சபையால் நீண்டகால குத்தகை அடிப்படையின்மீது கொள்வனவு செய்திருந்த ரூபா.72,600,542 பெறுமதியான குத்தகை காணிகள், காணிகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) அதிகார சபையின் நிதியத்திலிருந்து மீளாய்விற்கான ஆண்டில் கொள்வனவு செய்திருந்த பெறுமதி ரூபா. 26,172,364 ஆன சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் குறைப்பாடுகளாக அரச அளிப்புகளாக கருதி கடன் தீர்ப்பு செய்ததன் காரணமாக ஆண்டுக்கு ஏற்புடையதான பிற்போடப்பட்ட வருமானம் ரூபா. 6,164,341 ஐ அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

(எ) 2015 ஆண்டு தொடக்கம் 2017 ஆண்டு வரை 07 பயிற்சி நிலையங்களுக்கு ஏற்புடையதாக மீளாய்விற்கான ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா.1,529,672 ஆன குத்தகை செலவினம் கடந்த காலத்திற்கு சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்விற்கான ஆண்டின் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதேபோன்று 2019 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா. 200,000 ஆன வாடகை எதிர்காலத்திற்கு செலுத்தியதாக கவனத்தில் கொண்டு கணக்கு வைப்பதற்கு பதிலாக மீளாய்விற்கான ஆண்டின் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2017 ஆண்டுக்கு ஏற்புடையதாக 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா. 949,587 ஆன பல்வேறு செலவினம் மற்றும் ரூபா. 872,506 ஆன காலவரைப் பயணச்சீட்டு கட்டணங்கள் கடந்த ஆண்டின் இலாபத்தில் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்விற்கான ஆண்டில் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஐ) ஒருகொடவத்தை தொழில்நுட்ப பொறியியல் பயிற்சி நிறுவனம் பேணிச் செல்கின்ற மதிப்பீட்டு பெறுமதி ரூபா. 181,000,000 ஆன ஹெக்டயார் 1.5951 காணியின் ஒரு பகுதி மற்றும் புத்தக பெறுமதி ரூபா. 305,486,464 ஆன கட்டிடங்களின் ஒரு பகுதி 2015 ஆம் ஆண்டில் களணி பாலம் கருத்திட்டத்திற்கு கையேற்கப்பட்டிருப்பினும், அந்த காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி அடையாளம் காணப்பட்டு கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. அதேபோன்று கையளிக்கப்பட்ட காணிக்குப் பதிலாக 2015 ஆம் ஆண்டில் அதிகார சபையிடம் வழங்கியிருந்த புத்தகப் பெறுமதி ரூபா. 202,278,159 ஆன காணி மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்படவில்லை. மேலும் அகற்றப்பட்ட கட்டிடங்களுக்குப் பதிலாக ரூபா.1,539,821,351 ஐ செலவிடப்பட்டு மேற்படி கருத்திட்டத்தில் நிருமாணிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிருந்த மற்றும் தற்போது பயன்படுத்துகின்ற கட்டிடங்களின் பெறுமதி மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஒ) ஒருகொடவத்தை மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனம் நிர்மாணிக்கையில் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்டிருந்த காணியின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா. 231,000,000 ஆன பகுதி 2016 ஆம் ஆண்டில் அணுசக்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிருந்ததுடன், அதற்குப் பதிலாக மதிப்பீட்டு பெறுமதி ரூபா. 119,000,000 ஆன காணி ஹல்பராவ பிரதேசத்தில் கிடைக்கப் பெற்றிருந்தது. அது 2017 பெப்ரவரி 02 ஆந் திகதி தொடக்கம் பயன் கொண்ட

போதிலும், அந்த காணியின் பெறுமதி கணக்கு வைப்பதற்கு மற்றும் அகற்றப்பட்ட காணியின் பெறுமதி கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

(ஓ) மொத்த பெறுமதி ரூபா. 630,642,234 ஆன ஜப்பான் மற்றும் மேற்கு ஜேர்மன் நிதியத்தின் கீழ் பல ஆண்டுகளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஒருகொடவத்தை மற்றும் கட்டுபெத்த பொறியியல் பயிற்சி நிறுவனங்களில் கட்டிடங்களை வருடாந்தம் தேய்மானம் செய்திருப்பினும், முறையான அடிப்படையின் கீழ் பிற்போடப்பட்ட வருமானமாக அடையாளம் காணாது ஒதுக்கத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(க) ஒருகொடவத்தை பொறியியல் பயிற்சி நிறுவனம் மீள் ஸ்தாபிக்கையில் பூமியில் பொருத்தியிருந்த உபகரணங்கள் அழிந்து சென்றுள்ளமையால் அதற்குப் பதிலாக 2017 ஆண்டில் களணி பாலம் கருத்திட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா.44,628,721 பெறுமதியான உபகரணங்களை கணக்கு வைப்பதற்கு மற்றும் அழிந்துள்ள உபகரணங்களில் பெறுமதி அடையாளம் காணப்பட்டு கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ங) 2016 ஆண்டில் பயிலுநர்களை பயிற்றுவிக்கும் பொருட்டு அரசாங்க நிறுவனத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா. 8,812,500 ஐ உரிய அலுவலின் பொருட்டு செலவிடப்பட்டிருக்கையில், அந்த பணத்தொகை வருமானமாக கணக்கு வைக்கப்படாது மேலும் வைப்புகளாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ச) மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக, பணிக்கொடை ஒதுக்கீடு கணக்கிடுகையில், பிழையாக கணக்கிடுதல் காரணமாக மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக பணிக்கொடை ஒதுக்கிடுதல் மற்றும் திரட்டிய ஒதுக்கீடுகள் ரூபா.30,014,189 ஆல் குறைவாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஞ) மீளாய்விற்கான ஆண்டில் அதிகார சபையின் சேவையில் ஓய்வு பெற்றிருந்த நான்கு அலுவலர்களின் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய ரூபா. 2,206,047 ஆன பணிக்கொடை தொகை, ஆண்டில் கடன் அடிப்படையில் பெற்றுக் கொண்டிருந்த ரூபா.428,500 ஆன மூலதன உபகரணங்கள் மற்றும் மேற்கொள்கின்ற வேலைகளின் கீழ் செலுத்தப்பட வேண்டிய ரூபா. 1,912,854 கணக்கு வைக்கப்படவில்லை.

(ட) 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியில் பயிற்சி நுகர்வோர் பொருட்கள் மற்றும் நாளாந்த அறிக்கை புத்தகங்களின் இறுதி தொகை ஒழுங்கு முறையாக ரூபா.12,370,230 ம் மற்றும் ரூபா. 2,268,602 ம் குறைவாக நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

(ண) அதிகார சபையின் உப அலுவலகங்களில் 2017 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக ரூபா. 9,583,231 ஆன திரண்டு நின்ற மிகை ஒதுக்கீடு பொருட்டு சீராக்கல் மேற்கொள்ளாமை காரணமாக நடைமுறை பொறுப்புகள் அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்வி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை.

பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவுக்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகள் அறிவுறுத்தப்பட்டது.

2. ஏனைய சட்டத்துடனான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, எனது அறிக்கையில் மறுதலிப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன், இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு உரிய நிதி அறிக்கைகள் அதிகார சபையில் பேணப்பட்டிருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகார சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே அதிகாரசபையினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் அதிகாரசபையின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் அதிகாரசபை இணங்கியொழுகாதுள்ளமையை குறிப்பிடுதல்.

சட்டதிட்டங்கள் /ஏற்பாடுகளின் தொடர்	விபரம்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை	
(i) நிதி ஒழுங்குவிதி 115 (4) பிரிவு	முன்னரான நிதி ஆண்டுக்கு முதலில் நிதி ஆண்டுக்கு ஏற்புடையதான எல்லா உரித்துகளுக்கும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் தலைமை கணக்காளரின் அனுமதி பெற்றுக் கொள்ளுதல் வேண்டுமாயினும், அதற்கு முரணாக 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக ரூபா. .567,000 ஆன வாடகை மீளாய்விற்கான ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது.
(ii) நிதி ஒழுங்குவிதி 371 மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை 371 (2) பந்தி	ஏதேனும் உரிய அலுவலுக்கு வழங்கியிருந்த நிமித்தக் கட்டுநிதி உரிய அலுவல் முடிவடைந்தவுடன், சீராக்குதல் வேண்டுமா-யினும், 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் தொடக்கம் சீராக்காதுள்ள முற்பணம் மீதி ரூபா. 5,031,401 ஆகும்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபை அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகாரசபையின் வளங்கள், காலவரையறை-களினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையை குறிப்பிடுதல்.

(அ) அதிகார சபையின் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் பொருட்டு வழங்குநரை தெரிவு செய்வதற்கு கிடைக்கப் பெற்றிருந்த விலை கணக்குகளுக்கிடையில், ஆகக் குறைந்த விலை கணக்குடன் கூடிய விலை கேள்விதாரருடன் கலந்துரையாடி, நிபந்தனைகள் தொடர்பாக இணக்கப்பாட்டுக்கு வரும் ஆற்றல் இருக்கையில் அதனை கவனத்தில் கொள்ளாது, இரண்டாவது ஆகக் குறைந்த விலை கேள்வி தாரருடன் அணுகுதல் காரணமாக ஆண்டு ஒன்றுக்கு ரூபா.5,065,860 தொகையிலான நிதிசார் நட்டம் ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) கிளிநொச்சி தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் இலங்கை ஜேர்மன் கைத்தொழில் நிறுவனத்தின் 2018/2019 சுத்திகரிப்பு சேவை பெறுகை செயற்பாடுகளுக்கு புறம்பாக அதிகார சபையின் பாதுகாப்பு சேவை நடவடிக்கைகளில் ஈடபட்டுள்ள தனியார் நிறுவனத்தின் முகாமைத்துவத்தின் கீழ் உள்ள வேறு நிறுவனத்திடம் வழங்கப்பட்டு ரூபா. 7,155,761 செலுத்தப்பட்டிருந்தது.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) பல ஆண்டுகளுக்கு முன்னர் பகுதிநேர பயிற்சி கற்கைநெறி வருமானங்களிலிருந்து நிலையான வைப்புகளில் முதலீடு செய்திருந்த ரூபா. 33,911,384 ஐ குறித்த கற்கை நெறியை மேம்படுத்துவதற்கு பயன்படுத்துவதற்குப் பதிலாக அதிகார சபையின் பல்வேறு துறைகளிடம் விநியோகிப்பதற்காக 300 கணினிகளை கொள்வனவு செய்வதன் பொருட்டு செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) நிலையான வைப்புகளில் முதலீடு செய்திருந்த மாணவர் நலனோம்பல் மற்றும் கற்கை நெறிகளை மேம்படுத்துவதற்கு ஏற்புடையதாக ரூபா. 1,515,000 ம் பகுதிநேர கற்கைநெறிகளுக்குரிய ரூபா.3,088,910 ம் மீள பெற்றுக்கொண்டு அதிகார சபையின் பயன்பாட்டுக்காக மூலதன உருப்படிகளை கொள்வனவு செய்வதன் பொருட்டு செலவிடப்பட்டிருந்தது.

(இ) உடன்படிக்கை மீது ஆட்சேர்ப்புச் செய்த விரிவுரையாளர் ஒருவரது சேவையினை நிறுத்துவதற்கு எதிராக அவரால் தொடுத்திருந்த வழக்கில் தீர்ப்பு பிரகாரம், குறித்த விரிவுரையாளரின் சேவைக் காலம் நீடிக்கையில்,

சேவை இடையிறாது சேவை உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ளதன் காரணமாக அதிகார சபையிடம் ரூபா. 3,875,000 ஆன நட்டஈடு தொகை செலுத்த வேண்டி ஏற்பட்டது.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் 71 ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மற்றும் 2017 ஏப்ரல் 07 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத, கருத்திட்ட ஒருங்கிணைப்பாளர் பதவியாக புதிய பதவிப் பெயரை உருவாக்கி 04 அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்து 2016 ஆண்டு தொடக்கம் 2018 ஆண்டு வரை ரூபா. 1,350,119 ஐ திறன் துறை சார் அபிவிருத்தி கருத்திட்ட நிதியம் மூலம் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) அடிப்படை சாத்தியவள கற்கையினை மேற்கொள்ளாது, பொறியியல் தொழில்நுட்ப நிறுவனம் தாபிப்பதற்காக மூடப்பட்ட பாடசாலையின் கட்டிடங்கள் 2018 ஆம் ஆண்டில் ரூபா 8,185,249 ஐ செலவிடப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டிருந்தது. அந்தக் கட்டிடங்கள் பயன்படுத்தாது கைவிடப்பட்டிருந்தமை 2019 யூலை 19 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

(ஊ) கட்டுபெத்தை கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் பயிலுநர்களால் உற்பத்தி செய்கின்ற தளபாடங்களை விற்பனை செய்யும் நோக்கில் 2014 மற்றும் 2016 ஆகிய காலப் பகுதிக்குள் ரூபா. 18,847,771 ஐ செலவிட்டு நிறுவனத்தின் நிலப் பகுதியில் காட்சிக்கூடம் நிர்மாணிக்கப்பட்டிருப்பினும், அந்தக் கட்டிடம் 2020 ஜனவரி மாதம் வரை பயனற்று இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) 2018 நவம்பர் 18 ஆந் திகதிய தனியார் தொலைபேசி நிறுவனத்தால் அதிகார சபையிடம் Huawei வகையிலான Tab கணினி 450 ஐ அன்பளிப்பு செய்திருந்ததுடன், அதில் ரூபா. 1,626,400 பெறுமதியான Tab கணினி 16 ஐ 2019 ஒக்டோபர் 15 ஆந் திகதி வரை வழங்காது பிரதான களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2006 பெறுகை வழிகாட்டல் கைந்நூலில் 2.14.1 பிரிவு மற்றும் 2017 மார்ச் 15 ஆந் திகதிய குறைநிரப்பி 33 இன் படி திணைக்களத்து பெறுகை குழுவின்கீழ் திறந்த போட்டியுடன் கூடிய பெறுகை திட்டம் பின்பற்றப்பட வேண்டிய ரூபா.

50,211,231 ஆன கொள்வனவு தொடர்பில் பெறுகை வழிகாட்டல் கோவையில் 4.4.2 பந்திக்கு முரணாக பெறுகைகளை பகுதியாக்கி (Slicing) வாங்குதல் முறையின் நடைமுறைகளை கடைபிடிக்கப்பட்டிருந்தது.

டப்லியு.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்றுவிப்பு அதிகார சபையின் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்கு-படுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 12 ஆவது பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை - பதில்கள்

01. அ) 2020 ஆண்டு தொடக்கம் கணக்கீட்டு கொள்கை முறையிலான நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆ) 2020 ஆண்டில் வாகனங்களில் மீள்கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஏனைய சொத்துக்கள் 2020 ஆண்டில் வருடாந்த பொருட் மீளாய்வில் மீள்கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பீட்டு திணைக்களம் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இ) தற்போது அதிகார சபைக்குரியதான வாகனங்களை மீள்கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், மீள்கணிப்பீட்டு பெறுமதிகள் 2020 இன் இறுதி கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈ) இணங்கப்படுகிறது. அதிகார சபைக்கு எதிரான வழக்குகள் தொடர்பாக குறிப்பு இலக்கம் 30 மூலம் காட்டப்பட்டுள்ளது. குறித்த வழக்கு தீர்ப்பு 2019 மே மாதம் 02 ஆந் திகதி கிடைக்கப்பெற்றுள்ளதால் 2018 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுகளில் ஒதுக்கீடுகளை காண்பிப்பதற்கு முடியவில்லை. 2019 ஆண்டின் இறுதி கணக்குகளின் குறிப்புகள் மூலம் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் ஒதுக்கீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளது. 2020 டிசெம்பர் மாதமாகும் போது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் எல்லா கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், ஊழியர் சேமலாப நிதியத்தின் தொழில் தருநர் தொகையில் ஒரு பகுதியை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உ) 2019 ஆம் ஆண்டில் செவ்வையாக்கப்பட்டள்ளது.

ஊ) 2019 ஆம் ஆண்டில் செவ்வையாக்கப்பட்டள்ளது..

எ) இது தொடர்பாக தேடிப்பார்த்து தேவையான செவ்வையாக்குதலை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்வதாக அறியத்தருகின்றேன்.

ஏ) 2019 ஆம் ஆண்டில் செவ்வையாக்கப்பட்டள்ளது.

ஐ) 2019 ஆம் ஆண்டில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. அகற்றப்பட்ட பகுதிக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெறுமதி கோரியுள்ளதுடன், அது கிடைக்கப்பெற்றதன் பின்னர், மதிப்பீட்டு திணைக்களம்மூலம் மதிப்பீட்டு பெறுமதி பெற்றுக்கொண்டதன் பின்னர் 2020 ஆண்டின் கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஒ) 2015 ஆம் ஆண்டில் களனி பாலம் கருத்திட்டத்தின் காணிகள் கட்டிடங்கள் கையேற்பு செய்தல் தொடர்பாக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு 2020.07.07 ஆந் திகதியில்

கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி 2020 இறுதி கணக்குகளை தயாரிக்கும்போது செவ்வையாக்கப்படும்.

ஓ) 2019 ஆம் ஆண்டில் ஒரு பகுதி செவ்வையாக்கப்பட்டுள்ளது. கட்டுபெத்த பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் 126,669,016.51 ம், ஒருகொடவத்தை மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் 470496549.47 ம் 2019 ஆண்டில் பிற்போடப்பட்ட வருமானமாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

க) 2019 ஆம் ஆண்டில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

ங) இதன் பின்னர் இவ்வாறான பிழைகள் ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ச) இணங்குகின்றேன். 2019 ஆம் ஆண்டில் கணக்குகளில் செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஞ) இணங்குகின்றேன். இதன் பின்னர் இவ்வாறான பிழைகள் ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ட) டெலி பெகேஜில் இருப்பு சோதனையின் ஆரம்ப இருப்பாக காட்டப்பட்டாலும், பரிசோதனை செய்கையில் இறுதி தொகையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ண) இவ்வாறான பிழைகள் எதிர்காலத்தில் ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

02அ) விலை கோரும் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான நிபந்தனைகளை மீறியதன் காரணமாகவும் ஆகக் குறைந்த விலை கணக்குகளை சமர்ப்பித்திருந்த விலை கேள்வி சமர்ப்பிக்கப்பட்டவரால் எமது சேவை உடன்படிக்கையில் 4 பிரிவுகளின் பொருட்டு இணங்க முடியாதென எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதால், அது தொடர்பாக குறித்த நிறுவனத்தின் பிரதிநிதியாளர்களுடன் கலந்துரையாடப்பட்டது. ஆயினும் அவர்கள் குறித்த நிபந்தனைகளுடன் இணங்க இயலாது என்று அறிவித்துள்ளனர். பிரதான நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத கேள்விக்காரர்களுடன் கலந்துரையாடுதல் சட்டரீதியற்றதால் இரண்டாவதாக விண்ணப்பம் செய்தவரை தெரிவு செய்வதற்கு நேரிட்டது.

ஆ) இந்த சந்தர்ப்பமாகும்போது பிரதான அலுவலகம் அடங்கலாக 03 தேசிய நிறுவனங்களில் சுத்திகரிப்பு சேவை பேணிச் சென்ற வழங்குநர்களிடத்தில் கிளிநொச்சி SLGTI சுத்திகரிப்பு சேவை வழங்குதல் தொடர்பில் விலை கணக்குகளை பெற்றுக்கொள்ளும்போது அந்த விலை ஒரு மாதத்திற்கு ரூபா.881,911.77 ஆனதுடன், அப்போது நிறுவனத்தில் பாதுகாப்பு சேவை வழங்கிய டெல்வ் கார்ட் சிக்கியுரிட்டி சர்விஸ் நிறுவனத்துடன் இணைந்துள்ள டெல்வ் கார்ட் மேன் பவர் சர்விஸ் நிறுவனம் அவர்களின் சுத்திகரிப்பு சேவை பொருட்டு 01 மாதத்திற்கு அறவிடப்படும் தொகை ரூபா.381,500 ஆகும். அதன்படி புதிய நிறுவனத்திடம் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை ஒப்படைத்தால் 01 மாதம் பொருட்டு ரூபா. 500,411.77 ஆன நிதிசார் நட்டம் ஏற்படும். இவ்விடயங்களை கவனத்தில் கொண்டு கிளிநொச்சி SLGTI நிறுவனத்தின் சுத்திகரிப்பு

நடவடிக்கைகளை பேணிச் செல்லும் ஒப்பந்தம் டெல்வ்கார்ட் மேன் பவர் சர்விஸ் நிறுவனத்திடம் கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

03. அ) திரட்டிய நிதியத்திலிருந்து கிடைக்கப்பெறும் பணம் போதுமற்றதால், அதிகார சபையின் மாணவர்களின் நலனோம்பல் பொருட்டு தாபிக்கப்பட்டுள்ள நிதியத்திற்கான சட்டம் பிரகாரம் கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதிக்கமைவாக அந்தக் கணினிகளை கொள்வனவு செய்துள்ளதுடன், அதில் பெரும்பாலான அளவு மாணவர்களுக்-கிடையிலும் எஞ்சியவைகளை பிரிவுகளுக்கிடையிலும் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆ) பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் நியதிச்சட்ட நோக்கங்களின் பிரகாரம் மாணவர்களுக்கு தேவையான பயிற்சி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதியின் கீழ் ரூபா. 1,515,000 ஆன தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது.

இ) கட்டுநாயக்க, பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் கடற்படை பொறியியல் பிரிவிடம் 2009.11.01 ஆந் திகதி தொடக்கம் 2019.11.03 ஆந் திகதி வரை ஒப்பந்த அடிப்படையில் சேவை உடன்படிக்கைக்கு அமைவாக இந்த விரிவுரையாளரை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. அதன்போது 2016.11.04 ஆந் திகதி தொடக்கம் 2019.11.03 ஆந் திகதி வரையிலான காலப் பகுதிக்காக சேவை இடையறுத்து சேவை உடன்படிக்கை வழங்கப்பட்டிருந்தது.

சேவை இடையறுத்து சேவை உடன்படிக்கை மேற்கொள்ளுதல் தொழில் சட்டத்தின் படி சட்டரீதியானதல்ல என்று உறுதிப்படுத்தியதன் காரணமாகவும் இந்த அதிகார சபை மற்றும் சம்பந்தப்பட்ட விரிவுரையாளர் ஆகியோருக்கிடையில் முறையான சேவை உடன்படிக்கை இருந்த படியால் 2009.11.01 ஆந் திகதி தொடக்கம் 2019.11.03 ஆந் திகதி வரை தொடர்ச்சியான சேவை இருந்ததாக தொழில் தீர்ப்பு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி சம்பந்தப்பட்ட செலவினை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. தற்போது ஒப்பந்த அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் சேவையாற்றும் எல்லா அலுவலர்களுக்கும் ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அறியத் தருகின்றேன்.

ஈ) இப் பதவி பெறுநர்கள் திறன் துறைசார் அபிவிருத்தி நிதியத்தின்கீழ் கருத்திட்டத்தின் நிகழ்ச்சித்திட்டங்களை கூட்டிணைப்பதற்காக, சம்பந்தப்பட்ட காலப்பகுதிக்குள் கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதியின் மீது ஒருவரையும், மூன்றுபேரை தலைவர் அவர்களின் அனுமதியுடனும் நியமனம் செய்யப்பட்டுள்ளது. இந்த நான்கு பேருக்கும் எதிர்பார்க்கப்படும் கடமைப் பொறுப்புகளை (TOR) அமைவாக கடமைகள் கையளிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் இவ்வாறான நியமனங்கள் மேற்கொள்ளவில்லை.

உ) இந்த கட்டிடம் தொடர்பில் தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் மூலம் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் பிரகாரம் இந்த கட்டிடம் கட்டுப்பாட்டுச்

சபையின் அனுமதிக்கமைவாக தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதகிார சபையிடம் வழங்குவதற்கு தற்போது கலந்துரையாடப்படுகிறது.

ஊ) கட்டுபெத்த பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் புதிய கண்காட்சிகூடம் தொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இணக்கப்பாட்டுடன் இங்கு ஜப்பான் மொழி நிலையம் நடாத்திச் செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

எ) தற்போது இந்த டெப் Tab கணினி இயந்திரங்கள் அனைத்தும் பரிசோதகர்களின் பொருட்டு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள்பபட்டுள்ளது.

(ஏ) துறைசார் திறன் நிதியத்தில் 2017.10.29 ஆந் திகதிய கடிதம் மூலம் 10 வார காலப்பகுதிக்குள் பெறுகை நடவடிக்கைகளை பூர்த்தி செய்ததன் மீது இந்த பணத்தொகை செலுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பொறியியல் தொழில் நிறுவனத்தின் பொறியியல் பிரிவு 04 இற்காக விசேட அறிவுள்ள அலுவலர்களின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மூலம் பரிந்துரை செய்துள்ள பணிப்பாளர் சபை தீர்மானம் படி விலை கணக்கு கோரப்பட்டு ரூபா. 10 மில்லியனுக்கு குறைந்த அளவு ஆவதால் வாங்குதல் முறையின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 04 பிரிவுகளுக்கு ஏற்புடையதாக மாணவர்களின் அறிவை புதுபிப்பதற்கு ஏற்புடைய வகையில் தேவையான உபகரணங்களை (Slicing) முறைக்கு கொள்வனவு செய்ய நேரிட்டது.